Reg. M. 2330

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955

உ

சித்தாந்தம்.

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 26 | விஜய வைகாசி 1953 மே | இதழ் 5

நாட்டு ஒலி

1. சமாஜ ஆண்டுவிழா :—சென்ற 47 ஆண்டுகளாக மார்கழி மாதத்தில் நடந்துகொண்டு வந்த சமாஜ ஆண்டு நிறைவு விழாவானது இந்த ஆண்டில் சித்திரை மாதத்தில் ஈரோட்டில் நடைபெற்றது. இந்த மாறுதலுக்குக் காரணம் என்னவெனில் ஈரோட்டுச் சைவ அன்பர்கள் தங்கள் நாட்டுப்புறங்களில் சித்திரை மாதமே செயல்முறைக்குத் தக்க காலமாக எண்ணிக்கொண்டதுதான். பொதுவாக சித்திரை மாதத்தில் ஈரோடு மாநகரத்தில் கோடைக்கால உக்கிரம் பொறுக்க முடியாமல் இருந்தபோதிலும் இந்த ஆண்டில் மழைத்தேவதை கருணை கூர்ந்திருந்ததினால், ஆண்டுவிழாவிற்குச் சிறிது முன் நல்ல மழை பொழிந்து காற்று மண்டலத்தையும், நிலமண்டலத்தையும் குளிர்ச்சி செய்திருந்தது. மாநாட்டுக்கு வந்த மக்கள் கதிரவன் சூடு சிறிது குறைந்திருக்க இன்பமுற்றார்கள். நல்ல வேளையாக மாநாடு நடந்த மூன்று நாள்களும் மழை பெய்யாத காரணத்தினால் சமாஜக் கூட்டங்கள் தங்கு தடையின்றி நடைபெற்றன.

ஈரோட்டினுடைய பண்டைய வரலாற்றைப் பற்றிச் சென்ற இதழிலேயே சுருக்கமாகக் கூறியிருக்கின்றோம். சென்ற ஆண்டிலே ஈரோடை அப்பருடைய கோயில் படங்களைப் பதிப்பித்துள்ளோம். அக்கோயிலின் முன்கோபுரத்தின் தென்மேற்குத் திசையில் அம்மன் கோயிலுக்கு

முன்புறத்தில் பரந்தவெளி யிருக்கின்றது. அவ்விடத்தில் தென்னைக் கீற்றுகளால் ஒரு சிறந்த காவணம் அமைத்துத் தலைவர் வீற்றிருப்பதற்கு ஏற்ற பிரசங்கமேடையும் கட்டி, வெள்ளைத் துகில்களைக் கொண்டு மேலும் கீழும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. நூற்றுக் கணக்கில் ஆண் பெண் அன்பர்கள் உட்கார்ந்து விரிவுரைகளைக் கேட்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன. ஆலயவாயிலிலும் தெருக்கள்தோறும் வரவேற்பு வளைவுகள் கட்டப்பட்டிருந்தன. வெளிஊர்களிலிருந்து வந்த மக்களுக்கு வேண்டிய வசதிகள் நன்றாகச் செய்யப்பட்டிருந்தன. செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் தங்குவசதியும், கலைமகள் கல்வி நிலையத்தில் உணவு வசதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மொத்தத்தில் ஈரோடு நகரம் 3–நாள் விழாவிலும் அரிய காட்சியைத்தந்து கொண்டிருந்தது.

2. தலைவர்கள்:—சைவ சித்தாந்த சமாஜத்தை ஒட்டி மூன்று மாநாடுகளும் திருக்குறள் மாநாட்டை ஒட்டி ஒரு மாநாடும் நடைபெற்றன. சைவர் மாநாட்டிற்குச் சிவத்திரு. குன்றக்குடி மகாசந்நிதானம் அவர்களும் சைவ இளைஞர் மாநாட்டிற்குத் திரு.அ.ச.ஞானசம்பந்தனர் அவர்களும், சைவ மங்கையர் மாநாட்டிற்குத் திருமதி ஈசுவர வடிவு அம்மையாரும் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். சந்நிதானம் அவர்கள் மூன்று நாட்களும் ஈரோட்டிலேயே தங்கியிருந்து கூட்டங்களில் இருபொழுதுகளிலும் அரிய பெரிய விரிவுரைகளை நிகழ்த்தினார்கள். இந்தப் பெருமை வேறு எந்த நகரமும் பெற்றிருக்காது. தன்மதிப்புக் கொள்கைக்குப் பிறப்பிடமாக இருக்கும் ஈரோட்டிலே சைவப்பெரும் பிரசாரகரான சந்நிதானம் அவர்கள் மூன்று நாளும் சமயச் சேவையில் ஈடுபட்டிருந்தது ஓர் குறிப்பிடத் தக்க செய்தியாகும். தவத்திரு அடிகளார் அவர்கள் பெற்ற வரவேற்பும் அவருடைய புகழுக்குத் தக்கபடி உயர்ந்த பண்பாட்டில் அமைந்திருந்தது.

இனி மற்ற மகாநாடுகளில் தலைமை வகித்தவர்களும் ஒப்பற்ற சேவையில் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள். இளைஞர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ஞானசம்பந்தனு

ருடைய புலமைத் திறமை தமிழ் இளைஞர் உலகம் நன்கு அறிந்ததே. தமது கருத்துக்களை வற்புறுத்திப் பேசுவதிலும், ஒவ்வாத கருத்துக்களைத் தாக்கிப் பேசுவதிலும் வல்லுநர். உள்நாட்டு இளைஞர்களும் இம்மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டிருந்தால் இனியும் சிறப்பாக இருந்திருக்கும்.

இனி மங்கையர் மாநாட்டிற்குத் தலைமை வகித்த மங்கையார் திருமதி ஈசுவர வடிவு அம்மையார். தென்பாண்டி நாட்டிலே சைவத்திற்காக மிகச் சிறந்த சேவை செய்பவர்கள். அண்மையிலே பல மாநாடுகளுக்குச் சென்று கேட்பவர்களைக் கவர்ச்சி கொள்ளும் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்திக்கொண்டு வருகிறார்கள். ஈரோட்டு மங்கையர் மாநாட்டிற்கு மற்றும் பல சிறந்த அன்னைமார்கள் வந்திருந்தார்கள். அவர்களில் சிறப்பாகத் திருமதி ஆதிலட்சுமி அம்மையாரையும், திருமதி சேது அம்மையாரையும், திருமதி புஷ்பம் நடராஜன் அம்மையாரையும் குறிப்பிடவேண்டும். திருமதி புஷ்பம் அம்மையார் 'என்கடன்' என்னும் பொருள் பற்றிச் சிறந்த விரிவுரை ஒன்று நிகழ்த்தினார்கள். இம்மூன்று மகாநாடுகளிலும் வரவேற்புரைகள் நிகழ்த்தப்பெற்றன. தொடக்கத்தில் சைவக்கொடி உயர்த்தப்பட்டது. அக்கொடியை உயர்த்தி அதன் பெருமையை நிகழ்த்தினவர் திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள். இப்போது அவர்கள் ஈரோட்டு ஆணையாளராக இருக்கின்றார்கள்.

3. வழிபாடு:—இந்த ஆண்டு மாநாட்டில் ஒரு சிறந்த வேறுபாடு காட்சியளித்தது. இதற்குமுன் நடந்த ஒவ்வொரு மாநாட்டிலும் தொடக்கத்தில் கோவில் வழிபாடு நடைபெறுவது வழக்கம். அப்போது கோயில் குருக்கள் வடமொழியில் திருநாமங்கள் சொல்லி வழிபாடு நடத்துவார்கள். இந்த ஆண்டிலோ, ஈரோடை அப்பர் திருமுன்னிலையில் கோயில் குருக்கள்மார் சீரிய தமிழ்மொழியில் திருமுறைகளைச் சொல்லி வழிபாடு செய்தார்கள். வழிபட்டவர்களின் உள்ளங்களில் எழுந்த மனவெழுச்சிக்கு அளவேயில்லை. இவ்வகையாக நிகழ்ந்த நல்ல மாறுதலைக் கண்டு இவ்வாறாகவே மற்ற ஆலயங்களும் காட்சி அளித்தால் எத்துணை நன்றாயிருக்குமென்று எல்லாரும் எண்ணினார்கள்.

இதனை ஒட்டியே செயலாளர் கூட்டத்திலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது எல்லாத் தமிழ் நாட்டுக் கோயில்களிலும் தமிழிலேயே இறைவழிபாடு நடத்தவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. இதற்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் சமாஜ அங்கத்தினர்கள் மேற்கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

4. நடுநிலையம்:—சமாஜம் செவ்வையாக வேலை செய்யவேண்டும் என்றாலும், அதன் வேலை நிரந்தரமாக இருக்கவேண்டுமென்றாலும் அதற்கு ஒரு நடுநிலையம் சென்னையில் இருக்கவேண்டும். இதன் அவசியத்தைப் பற்றிப் பலமுறை முந்திய ஆண்டு விழாக்களில் பேசப் பட்டது. ஆனால் அது நாளதுவரை நிறைவேறவில்லை. இந்த முறை தலைமை வகித்த குன்றக்குடி சந்நிதானம் அவர் களை இந்த விஷயமாக உதவி புரியும்படி கேட்டுக்கொள்ளப் பட்டது. சந்நிதானம் அவர்களும் யோசிப்பதாகக் கூறி யிருக்கிறார்கள். அவர்களை உதவி புரியும்படி கேட்டுக் கொண்ட தீர்மானம் அனுகூலமாகும் என்று நம்பு கின்றோம்.

இனி இந்த இதழிலே சமாஜக் கூட்டத்தைப் பற்றிய ஏனைய செய்திகள் வெளியிடப்படும். வரவேற்புக்கழகத் தார்கள் ஈரோடு வரலாற்றைப் பற்றி ஒரு நூலும் வெளி யிட முயற்சித்து வருகிறார்கள்.

5. திருக்குறள் மகாநாடு:—மூன்றாம் நாள் திருக் குறள் மகாநாடு நடைபெற்றது. இது ஒரு சிறப்பான செய்தி. தலைமை வகிப்பதற்காக ஒத்துக்கொண்டிருந்த சென்னை நிதிஅமைச்சர் அவர்கள் வர இயலாததைப் பற்றி வருந்தி ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்கள். குன்றக்குடி சந்நிதானம் அவர்கள் மகாநாட்டுத் திறப்புரையை வெகு உருக்கமாக வெளியிட்டார்கள். தமிழாசிரியர் நயினார் முகம் மது அவர்கள் இலக்கணத்திற்கு இலக்கியம் என்ற பொருள் பற்றிப் பேசினார்கள். தமிழாசிரியர் உலக ஊழியர் அவர் கள் "திருவள்ளுவரின் தனித்தன்மை" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். பெருஞ்சொல்விளக்கனார் அ. மு. சரவண முதலியார் அவர்கள் "காமத்துப்பால்" பற்றிப் பேசினார்கள். இது 7-வது திருக்குறள் மகாநாடு.

சமாஜ ஆண்டு விழா

(G. கலியாணம், M.A., D.Econ.,)

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 47 ஆவது ஆண்டு விழாவும், சைவர் மாநாடும், சைவ இளைஞர் சைவ மாதர் மாநாடுகளும் ஈரோடு கோட்டைச் சிவாலயத்தில் 1953 ஏப்ரல், 24, 25-ஆம் தேதிகளில் வெகுசிறப்பாக நடைபெற்றன. திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி திருப்பெருந்திரு. தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகள் சைவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. ச. ஞானசம்பந்த முதலியார் M. A. அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள். சைவ மாதர் மாநாட்டிற்குத் தூத்துக்குடி திருமதி. C. E. V. ஈசுவரவடிவு அம்மையார் அவர்கள் தலைமை பூண்டார்கள்.

மாநாட்டிற்கு முன்னாள் தொடங்கியே வெளியூர் அன்பர்கள் வந்துகொண்டிருந்தார்கள். வரவேற்புக் கழகத் தொண்டர்கள் ஈரோடு புகைவண்டி நிலையத்திலிருந்து மோட்டார் வண்டியில் அவர்களை அழைத்துச் சென்றார்கள். கலைமகள் கல்வி நிலையத்தில் உணவு ஏற்பாடுகளும், செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் தங்குவதற்கு வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.

முதல் நாட் காலையில் தலைவர் அவர்களைத் திரு. சென்னியப்ப முதலியார் அவர்கள் வீட்டினின்றும் குடை, கொடி முதலிய விருதுகளுடனும், மேள வாத்தியங்களுடனும் மாட மறுகூடே நகர் வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. அன்பர்கள் திருவாசக பாராயண முழக்கம் செய்தனர். ஊர்வலம் கோட்டைச் சிவாலயத்தை அடைந்தது. திரு. R. P. தங்கவேலு அவர்கள், ஈரோடு நகராட்சி ஆணையர் திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A. அவர்களை இடபக் கொடியை ஏற்றுவிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவ்வண்ணமே கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

பின்னர் திருக்கோயில் வழிபாடு நடந்தது. அருச்சனைகள் எல்லாம் தமிழிலேயே நடைபெற்றன. அன்பர்கள்

எல்லோரும் மாநாட்டுப் பந்தலுக்கு வந்தனர். பந்தர், மாவிலை, கமுகு, வாழை முதலியவைகளால் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒலிபெருக்கிகள் அமைக்கப் பட்டிருந்தன. மேடைமேல் இடபவாகனரூடராய் அம்மை யப்பர் காட்சி அளித்தார். நால்வர் திருவுருவங்களும், திரு முறை நூல்களும் மேடையை அழகு செய்தன. பந்தலின் ஒருபாங்கர், திருவள்ளுவர், இராமலிங்கர், அவிநாசியில் 'முதலையொரு மதலைதரும் காட்சி' இவ்வோவியங்கள் கண்கவர் வனப்பினதாக அமைக்கப்பட்டிருந்தன. மேடை மீது எழுந்தருளுவித்திருந்த இறைவனுக்கு வழிபாடு நடந்தது. கோயில் குருக்கள்மார் "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" என்று தொடங்கி அருச்சித்தனர். அவர்கள் "வையம் நீடுக மாமழை மன்னுக...செய்ய வெண் திருநீறு சிறக்கவே" என்ற பாடலைச் சொல்லி முடிக்கும் போது மாநாட்டுப் பந்தலில் அமைதி நிலவியது.

வரவேற்புக்கழகத் தலைவர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., L. T. அவர்கள், தலைவர் அவர்களுக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்தளித்தனர்; வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். சமாஜச் செயலாளர் திரு. க. அரங்கசாமி முதலியாரவர்கள், B. A. ஆண்டறிக் கையைப் படித்தார்கள். பிறகு திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் தாம் வெளியில் ஏற்றிய கொடியை நாம் உள்ளமாகிய சீலையில் எழுதிக்கொள்ள வேண்டும் என்றும், அறிவு என்பது அருள், அன்பு, அறம் இவை களினாலாய முப்பட்டைக் கண்ணாடி யென்றும், அறமே இடபமென்றும், அறிவு ஆண்டவனென்றும், அருள் அல்லது அன்பு அம்மையென்றும், இந்த உண்மைகளை நாம் எண்ணினால் உய்வோம், நாடு உய்யும், உலகம் உய்யும் என்றும், சென்ற ஆண்டிலே அமெரிக்காவில் அதிகமாக (20 இலட்சம்) விலையான நூல் விவிலிய நூலாகிய சமயநூல் தான் என்றும், நம் நாட்டிலும் அம்மாதிரி வர வேண்டு மென்றும் தம் கொடியேற்றுச் சொற்பொழிவை ஆற்றி முடித்தனர்.

பிறகு, சுவாமிகள் தங்களுடைய தலைமைப்பேருரையை நிகழ்த்தினார்கள். (விரிவு வேறிடத்தில் காண்க). சமா ஜத்தின் அங்கத்தினர் தொகை 500-க்குக் குறைந்ததைப்

பற்றி வருந்தியும், சமயத்தொண்டு, சமூகத்தொண்டு இவைகள் செய்ய வேண்டுமென்றும், அனாதை இல்லங்கள் ஏற்படுத்தவேண்டும் என்றும், சமய போதனைகள் பள்ளி களில் புகுத்த வேண்டுமென்றும், சமாஜ அங்கத்தினர் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்து காட்ட வேண்டும் என் றும், சமாஜத்தொடர்பு இராமநாத புரத்து மாநாட்டில் ஆரம்பித்து, குன்றக்குடியில் சென்ற ஆண்டு விழாவை நடத்தச் செய்து, இவ்வாண்டில் தலைமை வகிக்கும்படி திருவருள் கூட்டுவித்ததென்றும், அடுத்த சமாஜ ஆண்டு விழாவைக் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் கும்பகோணத்தில் நடத்த எண்ணியிருப்பதாகவும் கூறிப் பேருரையை முடித்தார்கள்.

பின்னர், மதுரை தியாகராயர் கல்லூரித் தமிழ் விரி வுரையாளர் திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர் கள் "ஞான உரை" என்னும் பொருள் பற்றிச் சொற் பொழிவு ஆற்றினார்கள். ஈரோடு அல்லது ஈரோடை என்ற ஊரில்தான் ஓடைகிழார் என்ற பழந்தமிழ்ப் புலவர் வாழ்ந்திருக்கவேண்டுமென்றும், ஈரோடையப்பர் திருமுன் ஆதிசைவ அந்தணர் தமிழில் வழிபாடு செய்த காட்சி நாடு முழுதும் காணப்படவேண்டுமென்றும், திருப்பாதிரிப் புலியூர் – தவத்திரு. ஞானியாரடிகள் என்னும் ஞான சூரியன் மறைந்த பின்பு குன்றக்குடியில் இளஞாயிறு – ஒரு சிறிய பெருந்தகையார்–தோன்றிற்றென்றும், இப்போ துள்ள சூழ்நிலை 1300 ஆண்டுகள்முன் இருந்ததென்றும், பரசமய நெறிநின்ற பாண்டிய பல்லவ மன்னர்களைச் சம்பந் தர், அப்பர் இவர்கள் சைவ நெறிச் சாரச்செய்தார்க ளென்றும், அரசன் எவ்வழிக் குடிகள் அவ்வழி என்றபடி நாட்டு மக்களைத் திருப்பமுடிந்ததென்றும், 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்களான படியால் இக்காலத்தில் அவ் வளவு எளிதாக முடியாதென்றும், தமிழ் நாட்டெல்லை குறுகிவிட்டபடியால் ஆவன செய்ய வேண்டுமென்றும், இறைவன் உண்டா என்ற ஆராய்ச்சி வேண்டுவதில்லை யென்றும், துன்ப நீக்கமும் இன்பப் பெருக்கமும் வேண்டு மென்றும், இறைவன் ஒன்ருயும், உயிர்களுடன் உடனுயு மிருக்கிருன் என்றும், அவனைப் பற்றிக் "கேட்பான் புகில் அளவில்லை" யென்றும், துன்ப நீக்கத்திற்கும், இன்பப்

பெருக்கிற்கும் இடையே நின்று வேலை செய்யும் வினையின் நீக்கம் வேண்டுமென்று வேண்டுதல் செய்ய வேண்டுமென்றும், இவை ஆராய்வதே சாத்திரங்களின் முடிவென்றும், ஊனத்திருள் நீங்க ஞானமாம் மலர்கொண்டு வழிபட வேண்டுமென்றும், தம்மலையை அசைத்த இராவணனையும் "மெல்ல விரல் வைத்து ஊன்றி" அருள் செய்தான் இறைவன் என்றும், இன்ப துன்பங்களிலும் எங்கே போயிடினும் இறைவன் எண்ணம் வேண்டு மென்றும், சைவ உள்ளங்கள் ஒன்றுபட வேண்டுமென்றும், மனத் திட்பம் வேண்டும் என்றும், அருள்நெறி வளர வேண்டு மென்றும் மிகவும் அழகாக எடுத்துரைத்தார்கள். தலைவர் கருத்துரை கூறினார்கள் இத்துடன் முதல் நாள் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மாலையில் கூட்டத்தொடக்கத்தில் கோவை திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் சமாஜ வெளியீடான 'சித்தாந்தம்' என்னும் மாத இதழ் தொகை குறைந்து வருகிறதென்றும், ஆண்டுக்கு மூன்று ரூபாய் கொடுத்துச் சமாஜ உறுப்பினரானால் 'சித்தாந்தம்' இதழ் இலவசமாகக் கிடைக்கும் என்றும், அதிகமாக அன்பர்கள் அங்கத்தினர் ஆகவேண்டும் என்றும் மாநாட்டிற்கு வந்திருந் தோரைக் கேட்டுக்கொண்டனர்.

திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் B.A., L.T. "சைவசித்தாந்தமும் திருமுறைகளும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். பன்னிரு திருமுறைகளிலும் சைவ சித்தாந்தசாத்திரக்கருத்துக்கள்விரவியிருப்பதைப் பல மேற் கோள்களை எடுத்துக் காட்டி அரியதொரு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள்.

அதன் பிறகு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் - வித்துவான் திரு. G. சுப்பிர மணிய பிள்ளை, M. A., B. L. அவர்கள் 'தமிழ் மொழித் தலைவர்' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார் கள். அப்பர் பெருமான் சமூகம், சமுதாயம் நன்று வாழ வேண்டுமென்று எண்ணினார் என்றும், எங்கு சென்றாலும் உழவாரப்படை எடுத்துச் சென்றார் என்றும் 'பார்வாழ" என்று சேக்கிழாரும், "என் வழிவழி ஆளாகும் வண்ணம்" என்று திருநாவுக்கரசும் கூறியிருக்கிறார்கள் என்றும், நிலை

யாமையால் தான் உலகம் இருக்கிறதென்றும்; வந்தவாறெங்ஙனே போமாறேதோ என்றும், அச்சமில்லாமல் உலகில் வாழ முடியவில்லை யென்றும், அதைப் போக்க வேண்டுமென்றால் 'நமச்சிவாய' என்ற மந்திரத்தை இறுகப் பிடித்துக்கொள்ளவேண்டு மென்றும், "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும், நமச்சிவாயவே நானறி விச்சையும்" என்றும், "திருவாய்ப்பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்" என்றும், "நின்நாமம் பரவி நமச்சிவாய வென்னும் அஞ்செழுத்தும் சாமன்று உரைக்கத் தருதி கண்டாய்" என்றும், அப்பர் சுவாமிகள் கூறித் தம் வாழ்க்கையின் மந்திரம் "சிவாயநம" என்பதையே கொண்டிருந்தார் என்றும், அத்தகைய பெருந்தகையரான தமிழ் மொழித் தலைவரின் பேரே நமக்கு மந்திரம் என்றும் பேசி முடித்தார்கள்.

பிறகு தேவகோட்டை வழக்குரைஞர் திரு. வீர. சா. மெய்யப்பசெட்டியார் அவர்கள், B.A., B.L., "சைவத்தின் நிலைமையும், நமது கடமையும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். தமிழ்நாட்டு மடங்களின் தற்கால நிலைமை பற்றியும், நாம் தமிழ்மொழிக்கும், சைவசமயத்துக்கும் பணிசெய்யவேண்டும் என்றும் பல கருத்துக்களடங்கிய விறுப்புடைய சொற்பொழிவைச் செய்தார்கள்.

கடைசியாகத் தலைவர் அவர்கள் கருத்துரை பகர்ந்தார்கள். கூட்டத்திலிருந்து ஓர் அன்பர் எழுதியனுப்பிய வினாக்களுக்கு ஆணித்தரமான பதிலைச் சொன்னார்கள். தங்கள் ஆதீனத்தின்கீழ் 54 கிராமங்களில் 30,000 ஏக்கர் நிலங்களுக்கு உழவர்களுக்கு உரிமை கொடுத்திருப்பதாகவும், குலம் வேறு சாதிவேறு என்றும், மாம்பழம் ஒருசாதி யென்றும், மல்கோவா ஒருகுலம் என்றும், ஒழுக்கம் பண்பாடு இவைகளால் தோன்றுவது குலம் என்றும், சமூகத்தைப் பண்படுத்தினால் விதவா விவாகத்திற்கு அவசியம் ஏற்படாதென்றும், இன்னும் பல காரணங்கள் காட்டி வினாக்களுக்குத் தகுந்தவிடை இறுத்தார்கள். இறைவழிபாட்டுடன் முதல்நாள் கூட்டம் முடிந்தது.

இரண்டாம் நாள் காலை சைவ இளைஞர் மாநாடு தொடங்கியது. திரு. தியாகராஜன் அவர்கள் B. Sc., மாநாட்டுத் தலைவர் திரு. அ. ச. ஞானசம்பந்த முதலியார்,

M.A. அவர்கட்கு வரவேற்புரை வாசித்துக் கொடுத்தார்கள். குன்றக்குடி அடிகளார் ஆசியுரை பகர்ந்தார்கள். தலைவரவர்கள் தமது பேருரையை நிகழ்த்தினார்கள். அதில், சமயம் என்றால் நன்றாகச் செய்யப்பட்டது அல்லது சமைக்கப்பட்டதென்றும், அது எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் தோன்றிவிட்டது என்றும், தற்காலத்திலேயே அது தொடங்கிவிட்டது என்றும், தமக்குத் தெரிந்த மனிதனை வைத்து அதைவிடப் பெரிய மனிதனாக இறைவனை நினைத்தான் என்றும், மாக்கள் நிலையினின்று மக்கள் நிலைக்கு வரும்போது சமயம் தோன்றியது என்றும், பின்னும் சில ஆயிரம் ஆண்டுகள் கழித்து இயற்கையை இறைவனாக எண்ணத் தொடங்கினார்கள் என்றும், தமக்கு ஊறு செய்பவைகளைத் தமக்கு மேலாக எண்ணினார்கள் என்றும், தலையில் இடிக்கும் மரத்தையும், காலில் ஊறு செய்யும் கல்லையும் இறையாக நினைத்தார்கள் என்றும், இதை இரண்டாவது காலமாகக் கொள்ளலாம் என்றும், மூன்றாவது காலமாக இற்றைக்கு 5000 ஆண்டுகளின் முன் தொடங்கி 2000 ஆண்டுகள் வரை அதாவது சங்க காலத்துக்கு முன்வரை சொல்லலாம் என்றும், அதற்கு எழுத்து மூலமாக ஆதாரங்கள் இருக்கின்றன வென்றும், அகழ்ந்தெடுக்கப்பட்ட மோகஞ்சதோராவில் இலிங்கம், நந்தி இவைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், தொல்காப்பியர்பிரித்த நால்வகைநிலங்களில் முதலில் இறைவனை வைத்திருக்கிறார் என்றும், சங்க நூல்களில் சமயமும் கடவுளும் பிரிக்கமுடியாத நிலையில் கூறப்பட்டிருக்கிறது என்றும், ஆலமர்கடவுள், நீலமணிமிடற்றொருவன், பிறவா யாக்கைப் பெரியோன் என்று சிவபெருமான் கூறப்பட்டிருக்கிறார் என்றும், பிறகு களப்பிரர்காலத்தில் தமிழ் நாட்டில் இருள் சூழ்ந்திருந்ததென்றும், 7, 8, 9 ஆம் நூற்றாண்டில் மூவர் தோன்றி அற்புதத் தேவாரத் திருமுறைகள் ஓதினார்கள் என்றும், 10-ம் நூற்றாண்டில் சீவகசிந்தாமணியும், 12-ம் நூற்றாண்டில் பெரியபுராணமும் தோன்றினவென்றும், தொல்காப்பியம்முதல் பாரதியார் நூல்கள் வரை சமயத்தைச் சொல்லாத நூல்கள் இல்லை யென்றும், பயன் கருதாது வழிபடுகிற சமயம் சைவம் என்றும், பரிபாடலில் "யாம் இரப்பவை பொருளும் பொன்னும்

போகமுமல்ல...அருளும் அன்பும் அறமும்'' என்று கடவுளை வேண்டப்படுகிறதாகவும், வழியும் பயனும் ஒன்றென்று தமிழன்தான் சமயத்தில் சொன்னான் என்றும், 'கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி வீடும் வேண்டாதவர்' தமிழ் நாட்டினர் என்றும், வழிபாட்டின் பயன் வழிபாடே என்றும், அதே தமிழ்ச் சமயம் என்றும், அது தானும் சைவ சமயமாகும் என்றும் சமய வரலாற்றை மிக விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பின்னர், சென்னை, புலவர் திரு. முருகவேள், B.O.L. அவர்கள் ''சிவஞான முனிவரும் சைவசித்தாந்தமும்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். சிவஞான முனிவரை ஒரு யானைக்கு ஒப்பிட்டிருப்பதாகவும், பாண்டித்துரைத்தேவர் அவர்கள் அவரைத் தமது வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தார் என்றும், இறைவன் ஐந் தொழில்களைஏன் செய்கிறான் என்றுவினாக்களை யெழுப்பிச் சிவஞான முனிவர் விடைகள் சொல்லியிருப்பது போற்றுந் தகையனவென்றும், காஞ்சிப்புராணத்தில் தூவானம், பாலாறு இவைகளை வர்ணிக்கும்போது சைவசித்தாந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார் என்றும் சொல்லி முடித்தார்கள்.

திரு. தியாகராஜன் .B.Sc. அவர்கள் ஈரோடையப்பர் திருமுன் நடக்கும் வாரவழிபாட்டில் எல்லோரும் கலந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

திரு R. P. தங்கவேலு அவர்கள் இனியாம் செய்ய வேண்டுவதென்ன என்பதைப் பற்றிப் பேசினார்கள். தாம் சென்று வழிபட்ட சிவாலயங்கள் பாழ்பட்டுக் கிடக்கும் நிலைமையையும், இறைவன் பேர்களைத் தமிழிலிருந்து வடமொழிக்குப் பெயர்த்து உருவழித்து விடப்பட்டிருக்கிறதென்றும், தமிழிலேதான் இனி வழிபாடுகள் நடக்கவேண்டும் என்றும் உணர்ச்சி ததும்பிய ஒரு பேச்சுப்பேசி வந்திருந்தோரின் மனதில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தினார்கள். பின்னர் தலைவர் கருத்துரை கூறச் சைவ இளைஞர் மாநாடு இனிது முடிந்தது.

பகல் உணவின்பின் செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியில் சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சமாஜ உத்தியோகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. சமாஜ அலுவலகத்திற்காக ஒரு தகுதியான இடம்கொடுக்க வேண்டுமென்று குன்றக்குடி ஆதீன கர்த்தரவர்களைக் கேட்டுக்கொள்வதென்றும், அறநிலையங்களினின்றும் சேர்க்கப்பட்டு அரசியலாரிடம் உள்ள பெருந்தொகையைச் சமயத்திற்காக நல்ல முறையில் பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்வதென்றும், தமிழ்நாட்டுக் கோயில்களில் தமிழிலேயே எல்லா வழிபாடுகளும் நடத்தஆவன செய்யவேண்டும் என்றும், தீர்மானங்கள் நிறைவேறின.

பிற்பகலில் தூத்துக்குடி திருமதி C.E.V ஈசுவரவடிவு அம்மையார் அவர்களின் தலைமையில் சைவமாதர் மாநாடு நடந்தது. வரவேற்புரையின் பின் தலைவர் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார். குன்றக்குடி அடிகளார் ஆசியுரை கூறினார்கள். சிவகாசி திருமதி. ஞா. சண்பகம்மாள் அவர்கள் "சைவம் வளர்த்த மங்கையர்கள்" என்னும் பொருளை யெடுத்துக்கொண்டு மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார் இவர்களின் வரலாற்றைச் சொல்லி நீண்டதொரு சொற்பொழிவு செய்தார்கள்.

பிறகு, மதுரை திருமதி. புஷ்பம்நடராஜன் அவர்கள் "என் கடன்" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் சமாஜத்திற்கு அதிக உறுப்பினர்கள் சேரவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். தலைவர் முடிவுரை கூறியபின் சைவ மாதர் மாநாடு இனிது நிறைவேறியது. வரவேற்புக் கழகத்தினர், யாவருக்கும் நன்றி கூறினார்கள். சமாஜத்தின் சார்பாக திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் வரவேற்புக் கழகத்தார் செய்திருந்த எல்லா ஏற்பாடுகளுக்கும், அறுசுவையுண்டி, தங்கவிடுதி, ஏறிச்செல்ல ஊர்தி இவை போன்ற வசதி செய்ததற்கும், மூன்று மாநாட்டுத் தலைவர்களுக்கும், சொற்பொழிவாற்றிய பெருமக்களுக்கும், மற்றும் மாநாடுகள் சிறப்புற நடந்தேறுவதற்கு உதவி புரிந்த எல்லா அன்பர்களுக்கும் நன்றி தெரிவித்தார்கள். இறைவழி பாட்டுடனும், திருமுறை பாராயணத்துடனும் இரண்டாம் நாள் கூட்டம் இனிது முடிந்தது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"

செல்வம்....?

(வித்துவான். தி. மு. சங்கரலிங்கம்)

மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்கள் பல. அவை கல்விச் செல்வம், பொருட்செல்வம், மக்கட்செல்வம், செவிச்செல்வம் என்பனவாம். செவிச்செல்வம் தலையாயது என்று வள்ளுவர்கூறினும், மன அமைதியுடனிருந்து செவிச் செல்வம் தேடவேண்டுதலின் பொருட்செல்வமே இன்றி யமையாதது. அழியாக் கல்விச்செல்வம் பெற்றவனுக்கும் அழியும் பொருட்செல்வமின்றேல் அவனை நாடுமதிக்காது. அறிவுரையான — கற்பனையான — இனிமையான அவனது சொற் செல்வங்களைச் செவியேற்பாரும் உண்டோ ?

இல்லானை இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்
செல்லாது அவன் வாயிற்சொல் [வேண்டாள்

என்பது ஆன்றோர் அமுத மொழியாகும்.

கல்விச் செல்வமில்லாது பொருட்செல்வ முடைய வனையின் அவனைப் போற்றாதார் யாரோ ! அட்டைகள் போலன்றோ பலபட்டங்கள் ஒட்டிக் கொள்கின்றன. "பொருளிலார்க் கிவ்வுலகம் இல்லை" என்று வள்ளுவர் குறளிலும் கூறினர். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் இவ்வுலகிற்கு வேண்டப்படுவது. இவற்றுள் ஒருவன் அறஞ் செய்தற்கும், இன்பம் அடைதற்கும் பொருளன்றோ உயிர் நாடியாக உள்ளது. அறம், இன்பம் இவ்விரண்டின் இடையிலுள்ள பொருட்செல்வத்தை ஒருவன் அடைந்துவிடின் ஏனைய இரண்டை அடைதல் மிகவும் எளிது. நடுவிலுள்ள பொருட்செல்வமின்றேல் இவ்வுலகில் பல இன்னல் எய்தித் துன்புறுவர். இதோ பாருங்கள் இக் கருத்தமைந்த இன்தமிழ்ப் பாடலை :—

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும்எஞ் ஞான்றும்
அடுவது போலுந் துயர்.

—நாலடியார்

நாட்டிலே மக்கட்பெருக்கம் மிகுதியாகிறது. அம்மக்கட் பெருக்கத்திற் கேற்றநிலையில் உணவுப்பெருக்கம் வேண்டு மல்லவா? அதுதானில்லை. "மாதமும்மாரி மழைபெய்யும்" என்ற கவிஞர் வாக்குக் கனவாகிவிட்டது. இப்பொழுது வருடத்தில் ஒருமழையாவது வளமுறப் பெய்யுமா? என்ற ஐயநிலையிற் காலம் வந்துவிட்டது. மழையின்றி மாநிலம் நலம்பெறுமா? விளைவுதான் ஏது? காலம் இவ்வாறு காற்றினும் கடிதாய்க் கடக்கிறது. நாட்டில் செல்வநிலை சீர்ப்பட வேண்டும் எனக் கூக்குரலிட்டும், சீர்திருத்தம் பெறச்சிந்தனை செய்தும் வருகின்றனர் சிலர்.

மக்கள் தோன்றிய நாளில் உணவிலே, உடையிலே நாகரிகமற்றிருந்தனர். செல்வ நலமும் ஓரளவுக்குப் பயன் பட்டது. இன்றுதான் வளர்பிறைபோல நாளுக்கு நாள் வாழ்க்கைத் தரத்திலே நாகரிகம் உயர்கிறதேயன்றி செல்வ நிலைதான் பிற்போக்கில் இருக்கிறதே. "உழவேதலை" என்ற ஒண்டமிழ்ப் புலவர் வள்ளுவர் வாக்குப் பிற தொழிலைப் போற்றவில்லை. உழவர்களே வானம் நோக்கி வாடுகிறார்கள் என்றால் மற்றையோர்களைப்பற்றி என்ன கூறுவது? செல்வமுடையார் மதிப்பிற்காக வீண்செலவு செய்கிறார்கள். வறியவர் அது நோக்கித் தாமும் அவ்வாறு செயல்புரிய எண்ணி ஏங்குகின்றனர். அதுமட்டுமா? செல்வர்களிடம் கடன்வாங்கி மதிப்புக்காகச் செலவிட்டுப் பின்னை துகொஞ்சம்சொத்துக்களையும் இழந்து கோமாளித் தனமும், ஏமாளிப் பட்டமும் பெறுகின்றனர்; வறுமை யால் வாட்டமடைகின்றனர்; சிந்தைகுலைந்து சீரழிகின் றனர்; பொருள்தேட முயன்று புவனியில் அலைகின்றனர்.

வான்துளி மறக்க, வளமையற்றுப்போக, வறுமைப் பிணி வாட்ட, வஞ்சகர் வருத்தப் பசிப்பிணி பற்றுகிறது. இந்நிலையில் நாடிருக்கப் போதுமென்ற மனமுடன் இருக் காமல் பெற்றதைக் கீழாக்கிப் பெறாததை மேலாக்கி வாழ் வில் உருக்குலைந்து வாடும் சிலரைப் பார்த்துச் செல்வம் என்பது எது? என்பதைக் குமரகுருபர அடிகளார் சிறு கதை கூறுவது போலக்கூறி நம்மிடமே விடையைப் பெற வைக்குந் திறனைப் பாருங்கள்.

நாம் செல்வம் என்பதைப் பொன், வெள்ளி, உணவு, பணம் முதலியவற்றைக்கொண்டு வாழ்விற்கேற்ற பொருள்

பெற்று வாழும் நிலையையும், வறுமை என்பதை வயிற்றுக்கும் போதாத நிலையில் பசிப்பிணியால் வாடுவதையும் நாம் குறிக்கிறோம். இவைகட்கு அடிகள் தரும் விளக்கம் பாருங்கள் :—

பல நாட்டினையும் வெல்லுந் திறனுடைய மன்னன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் படைகள் பல இருந்தன. கருவூலத்திற் பெரும் பொருளிருந்தது. ஒற்றர் பலர் இருந்தனர். புவியிற் புகழுடன் வாழ்ந்தான். தனக்கு நிகருள்ளார் ஒருவரும் இல்லை என்றெண்ணியதால் இறுமாந்து காணப்பட்டான். களிப்பினால் மகிழ்ந்து காட்சிக்கரியவனானான். ஒருநாள் ஒற்றன் ஒருவன் மன்னனைக்குறுகி அரசே! நெடுந் தொலைவில்மன்னன் ஒருவன் நின்னினும் வல்லனாய்ப் பலமடங்கு பெருமையுடன் வாழ்கிறான். அவனை வெல்லுதல் நினது திறனுக்குச் சாலும் என்றான். மன்னன் உள்ளம் சினம் என்னும் சூறுவளியால் தாக்குண்டது. பொறாமை என்னும் அலைமோதியது. நிலையின்றி. நம்மினும் மேலான் இல்லை என்று எண்ணிடும் யாம் இவனைவெல்லுதலே மேல் எனத்திட்டமிட்டான். சூழ்ச்சியில் எண்ணம் இருந்தது. இதனால் இவனடைந்தது என்னெனின் உண்டி குறைந்தது; உறக்கம் ஒழிந்தது; உடல் மெலிந்தது. வெம்பிய உள்ளமுடையானுக்குத் தன் செல்வமே குறைந்துகாணப்பட்டது. அவனை வென்று அந்நாட்டுடன் தன்நாட்டையும் ஒன்றுபட இணைத்து வெற்றிக் கொடியை நாட்டிடுமோர்... எண்ணம் பொறாமையால் அலையுண்டது. மனமெனும் வயலில் ஆசை யென்னும் வித்து முளைத்தது. வாழ்நான் வளங்குன்றினான்; இது செல்வன் நிலை.

காட்டில் விறகொடித்து வெட்டி, ஊரில்விற்று அதனால் வரும் சிறு பொருள் கொண்டு உணவு தயாரித்துத் தானும், தன் மனையாளும், மக்களும் உண்டு பேராசையின்றி அப்பிணி பற்றாமல் கவலை மறந்து நித்திய வாழ்வை நேயமுறநடத்தி நிலவினான். இது விறகு வெட்டியான வறிஞன் நிலை. இப்பொழுது பாருங்கள்! செல்வனின் சீரழிந்த சிறப்பும், விறகுவெட்டி வளமுடன் வாழ்ந்த வகையும், இவர்களில் செல்வன்யார்? முடிவுகட்டுகிறார் முத்தமிழ் முனிவர். போதுமென்ற மனமுடனின்றி வாழ்வில் உருக்குலைந்துள்ளம் வெம்பி உற்று வாடும் மன்னனைவிடத் தேடிவைத்துச்

சீரழியாவறிஞன் விறகுவெட்டியே செல்வன் என்கிறார். போதும் என்றெண்ணி உள்ளதுகொண்டு ஒற்றுமையுடன் வாழ்வதே செல்வம் என்று அவர்கருத்தில் எண்ணுகிறார். அதனை வெளியிட்டுக் கூறுவதைப் பாருங்கள் பைந்தமிழ்ப் பாட்டிலே.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாஎனப் படுமே.

என்பது. இதனால் செல்வம்பல இருப்பினும் போதுமென்ற மனமுடனிருந்து வீணாக அலைந்து வாழாமலிருப்பதே செல்வம் என்று தவத்தின் சீலர், குமரனருள் பெற்ற கோமான், செந்தமிழ்ப் புலமையின் சிகரமான குமரகுருபர அடிகள் கூறுகிறார் என்றால் இதனினும் வேறுசெல்வம் சிறப்பாமோ? எனவே போதுமென்ற மனமே செல்வம் என்க. இதுபோன்ற மணிகள் குமரகுருபரர் பாடலாம் கடலிற்காணப்படுகின்றன. அதனைப் படித்துப் பயனடைதல் நம்மவர் கடனாகும்.

சைவ சித்தாந்த மகாசமாஜம்

47-ஆம் ஆண்டு அறிக்கை

இச்சமாஜம் 1905-ம் ஆண்டில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப்பெற்றது. பத்து ஆண்டுகளுக்குப்பின் பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது,

இச்சமாஜத்தின் நோக்கம் சைவசமயத்தைப் பரவச் செய்து, தமிழ் மொழியை வளரச் செய்வதாகும். இந் நோக்கம் நிறைவேறுதற்குப் பலமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவற்றுள் இன்றியமையாதன :

1. இதழ் வெளியிடல்.
2. நூற்களை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்கல்.
3. கூட்டங்கள் நடத்தல்.
4. சொற்பொழிவுகள் செய்வித்தல்.

இதழ் :—"சித்தாந்தம்" எனும் திங்கள் வெளியீடு 36 ஆண்டுகளாகச் சமாஜ உறுப்பினர்கட்குக் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டு தொடக்கத்தில் சமாஜ உறுப்பினர் தொகை 625. ஆண்டுமுடிவில் 508.

நூல்கள் வெளியீடு :—சைவத் திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும், சீவக சிந்தாமணி, நாலாயிரப்பிரபந்தம் முதலிய பிற சமய நூல்களும், சங்க இலக்கியங்களும் ஆக இதுவரை வெளிவந்த படிகள் ஏறக்குறைய நூறாயிரமாகும். மூவர் தேவார அடங்கன்முறை, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் நந்தன ஆண்டு பங்குனி உத்திர நாளில், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றுள்ளது. இவையாவும் அடக்க விலைப் பதிப்புக்களே. இவற்றைத் தவிரச் சிறு நூற்கள் பலவும் இனமாக வழங்கப்பட்டு வந்துள்ளன.

"சங்க இலக்கியம்" மறுபடியும் அச்சிடும்படி பல தமிழன்பர்கள் வேண்டுகிறார்கள்.

கூட்டங்கள் :—1951 டிசம்பரில் குன்றக்குடியில் 46-வது மாநாடு நடைபெற்றது. 1952 டிசம்பரில் சென்னை மல்லிகேஸ்வரர் கோயிலில் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை தலைமையில் மாதாந்தரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அப்பொழுது Dr. தேவசேனாபதி, புலவர் முருகவேள் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

செயற்கூட்டங்கள் :—சென்ற ஆண்டில் செயற்குழுக்கூட்டம் மூன்றும் பொதுக்கூட்டம் நான்கும் சென்னையில் கூடின.

சைவப் புலவர் தேர்வு :—சமாஜத்தாரால் நடத்தப்பெறும் இத்தேர்வில் சென்ற ஆண்டு விண்ணப்பித்தவர் அறுவர். எழுதியோர் மூவர். தேறியவர் இருவர்.

கணக்கு :—47-ஆம் ஆண்டு (1-12-51 முதல் 1-11-52 வரை) வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடு கீழே தரப்படுகின்றது.

சமாஜ 47-வது ஆண்டின் 1-12-51 முதல் 30-11-52 வரை
வர்வு செலவு தொகுப்பேடு

PUBLIC LIBRARY 18 JUL 1955 MADRAS

வரவு

சென்ற ஆண்டின் இருப்பு						
கையில்	14	2	4			
பாங்கியில்	1900	1	10			
				1914	4	2
புத்தகங்கள் விற்ற வரவு				181	15	0
உறுப்பினர் வரி				1787	3	0
சைவப்புலவர் தேர்வுக் கட்டணம்				12	0	0
கடனாகப் பெற்ற வரவு				50	0	0
பிற வரவுகள்				243	9	10
மொத்தம் ரூ.				4189	0	0

செலவு

வாங்கிய கடனைத் திருப்பித்தந்தது				50	0	0
அஞ்சல் செலவு				306	5	6
போக்கு வரவு				29	1	0
சித்தாந்தத்திற்குத் தாள் வாங்கியது				285	5	9
சித்தாந்தம் அச்சுச் செலவு				1474	7	9
பிற செலவு				19	13	0
ஆண்டு முடிவில் இருப்பு						
கையில்	13	0	4			
பாங்கியில்	2010	14	8			
				2023	15	0
மொத்தம் ரூ.				4189	0	0

ஆண்டு இறுதியில் இந்தியன் பாங்கில் இருப்பு ரூ. 2010-14-8ல் ஞானியார் நினைவு நிதி ரூ. 802-2-6ம், திருவெண்ணெய்நல்லூர் - திரு. சின்னசாமி ரெட்டியார் "முருகன் முந்நூல்" அச்சிடத்தந்த முதல் ரூ. 150ம் அடங்கியுள்ளன.

நன்றி: சென்ற ஆண்டு சமாஜத் தொண்டில் ஈடுபட்ட எல்லா அன்பர்களுக்கும், சமாஜம் நன்றி பாராட்டுகின்றது. உறுப்பினர் எண் இரண்டு ஆண்டுகளாக மிகவும் குறைந்து வருவதால், பழைய உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினரையாவது சேர்த்தல் தங்களின் இன்றியமையாத் தொண்டாகக் கொள்ளல் வேண்டும் என்று உறுப்பினர்களைச் சமாஜம் கேட்டுக்கொள்கின்றது.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

அங்கத்தினர் பொதுக்கூட்டம்

ஈரோட்டில் 25-4-53 அன்று நடைபெற்ற சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பெற்றன.

செயற்குழுவினரைத் தேர்ந்தெடுத்தல்

தலைவர் :—திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை.

துணைத்தலைவர் :—திரு. V. C. சுப்பையா கவுண்டர் (கோவை). திரு. P.T.S. குமாரசாமி செட்டியார் (குடந்தை).

பொதுச்செயலாளர் :—திரு. ச. சிவகுமாரன் (சென்னை)

துணைச்செயலாளர் :—திரு. சு. இளவழகன் (சைதை).

பொருட்காப்பாளர் :—திரு. ச. சிவகுமாரன்.

இதழாசிரியர் :—திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்.

துணை இதழாசிரியர்:—திரு. புலவர் முருகவேள், B.O.L.

கணக்குத் தணிக்கையாளர் :—ம. சிவராமன்.

அங்கத்தினர்:—திரு. S.T. அரசு. திரு சி. சுந்தரவிநாயக முதலியார். திரு. N. T. கிருஷ்ணசாமி. திரு. A. சோமசுந்தரஞ் செட்டியார். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்.

திரு. தி. க. சுந்தரம் பிள்ளை. திரு. M. R. சம்பந்த நாயகர். திரு. R. இராஜரத்னம் அம்மையார். திரு. C. அமிர்தகணேச முதலியார்.

வெளியூர் ஆய்வு உறுப்பினர்

செங்கற்பட்டு :—W. T. மாசிலாமணி முதலியார். க. வச்சிரவேலு முதலியார். ச. நடேச முதலியார்.

தென்னார்க்காடு :—புரிசை முருகேச முதலியார். W. K. ஜானகிராம் முதலியார். வரதராஜ செட்டியார். வெங்கடரமணய்யர்.

தஞ்சை :—சுந்தரேசஞ் செட்டியார்(குடந்தை). முத்த. வே. சொக்கலிங்கம் செட்டியார்(குடந்தை). மா. சிவகுருநாத பிள்ளை (சுந்தரபெருமாள் கோயில்). மௌ. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.

திருச்சி:—R.பஞ்சநதம்பிள்ளை. S.கனகசபாபதிபிள்ளை. T. S. சிவப்பிரகாசம். C. M. காமாட்சி முதலியார் (கரூர்).

மதுரை:—V. V. C. R. முருகேச முதலியார். K. அரங்கசாமி முதலியார். இடையகோட்டை ஜமீன்தார்.

கோவை:—S. மீனாட்சிசுந்தர முதலியார். C.S. இரத்தினசபாபதி முதலியார். R.P. தங்கவேலு (ஈரோடு) R. C. கதிர்வேலு, B.A. (ஈரோடு)

சித்தூர் :—மங்கலக்கிழார், அரங்கநாத முதலியார், B.A., B.L.

சேலம் :—A. K. கமாட்சி அம்மையார், R. V. கோபால் R. K. கிருஷ்ணசாமி (இராசிபுரம்).

இராமநாதபுரம் :—சா. கணேசன். P. L. T. L. தேனப்ப செட்டியார். சொ. நாராயணன் செட்டியார். பழ. நாராயணன் செட்டியார். பாலகவி. இராமநாதஞ் செட்டியார். இராம.சொ. திருநாவுக்கரசு செட்டியார். சேவு. மெய்யப்பச் செட்டியார் (தமிழ் வள்ளல்).

திருநெல்வேலி :—ந. சிவகுருநாத பிள்ளை. மறை. திருநாவுக்கரசு. தெ. கணபதியப்பன் (தென்காசி). கு. அருணாசலக் கவுண்டர். வீர. சிவசுப்பிரமணியன்.

பெங்களூர் :—A. R. அண்ணாமலை.

புதுச்சேரி :—திரு S. சென்னியப்ப முதலியார்.

யாழ்ப்பாணம்:—A. அருளம்பலம். முதலியார் முத்துத் தம்பி. அம்பிகை பாகன். சு. நடேச பிள்ளை (மந்திரி).

கொழும்பு:—அருள் தியாகராஜன். கனகரெத்னம். சு. சிவசுப்பிரமணியம்.

மலேயா:—கா. இராமநாதன்செட்டியார். R. V. கந்தையா.

ஆராய்ச்சிக் கழகம்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார்.
,, பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் M. A.
,, ம. பாலசுப்பிரமணிய முதலியார்.
,, க. வச்சிரவேல் முதலியார்.
,, S. மீனாட்சிசுந்தர முதலியார் (ஈரோடு)

சைவசித்தாந்த மகாசமாஜத் தீர்மானங்கள்

1. சென்னையில் சமாஜத்தின் அலுவலகத்திற்காகக் குன்றக்குடி ஆதீனத்திற்குச் சொந்தமான இடங்களில் தகுதியான ஓர் இடத்தைக் கொடுக்கும்படி, குன்றக்குடி ஆதீன மகா சந்நிதானம் அவர்களைக்கேட்டுக் கொள்வ தென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. தமிழ் நாட்டிலுள்ள சைவத் திருக்கோயில்களில் நடைபெறுகின்ற வழிபாடுகள் தமிழ்த் திருமுறைகளை யொட்டியே நிகழ்தல் வேண்டும் என்றும், மேற்படி வழி பாட்டு முறைகளை அமைப்பதற்குக் கீழ்க்கண்டவர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

1. குன்றக்குடி ஆதீனம்.
2. ஈசானிய சிவாச்சாரிய சுவாமிகள்.
3. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.

3. சென்ற ஏழு ஆண்டுகளாகச் சமாஜச் செயலாள ராக இருந்து செயலாற்றிய திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களுக்குச் சமாஜம் நெஞ்சார நன்றி செலுத்துகிறது.

4. (1) அறநிலைப் பாதுகாப்பு மன்றம்சர்க்காரிடம் ஒப்பு வித்த தொகையைச் சமயப் பாதுகாப்புக்காகப்பயன்படுத்து வது. (2) கோயில் நிர்வாக அதிகாரிகள் கோயில் வழிபாட்டு

முறைகளை அறிந்துகொள்வதற்குச் சமயத் தேர்வு ஒன்றை நடத்துவது - இவைகளைப் பற்றி அரசியலாரிடம் தெரிவிப்பதற்கு அடியிற் கண்டவர்களடங்கிய தூதுக் குழு ஒன்று நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

1. C. M. R. செட்டியார், கோவை.
2. ச. சச்சிதானந்தம் பிள்ளை.
3. V. C. சுப்பையா கவுண்டர்.
4. S. மீனாட்சிசுந்தர முதலியார்.

திருவள்ளுவர் திருநாளும் அதனைக் கொண்டாடும் முறையும்

(பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல்.)

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக யாம் கொண்டதற்குரிய காரணங்களை அறிதற்கு அன்பர்கள் சிலர் விரும்புகிறார்கள். ஆதலினால் முதலிற் சுருக்கமாகச் சில கூறுதும்.

திருவள்ளுவர் பெருமான் இவ்வுலகிற் றோன்றிய நாளையோ, 'பேரா இயற்கைப் பெரும்பேறெய்திய' நாளையோ அறிதற்குப் பொருத்தமான சான்றுகள் இல்லை. அவர் மறைந்த நாளைச் சிலர் மாசி உத்தரம் என்றும், வேறு சிலர் வைகாசி அனுடம் என்றுங் கருதி இவ்விரு நாட்களையுங் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் ஒருநாளை உலகம் முழுதுங் கொண்டாடச் செய்வதோடு, அந்த நாளைத் தமிழ் மக்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலும் கொண்டாடவுஞ் செய்யவேண்டும் என்று எமது தமிழ் மறைக் கழகம் முடிவு செய்தது. இதனாலே இவ்விரு நாளிலே பொருத்தமானதொரு நாளை அறிவிக்கும்படி சங்கங்கள் சிலவற்றையும் அறிஞர்கள் சிலரையுங் கேட்டோம்.

திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்புதற்குப் பல்லாற்றானும் தொண்டு செய்துவரும் சைவ சித்தாந்த

நூற் பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் பின்வருமாறு எழுதினார்கள். “அவர் (திருவள்ளுவர்) திருநாள் வைகாசி அனுடம் என்பதுதான் மறைமலை அடிகள் போன்றார் கருத்து. அவ்வண்ணமே எங்கள் பஞ்சாங்கத்தில் வெளியிட்டு வருகிறோம். அதைப் பார்த்து வெளியார் சிலர் தங்கள் பஞ்சாங்கத்திலும் அவ்வாறே வெளியிட்டு வருகின்றனர்.” திருவள்ளுவர் ஆண்டினையே தமிழர்கள் கைக்கொள்ள வேண்டுமெனக் கூறி அதனை நிலைநாட்டிய பெருஞ்செயலாளர் மறைமலையடிகள் என்பதைத் தமிழ் அறிஞர் யாவரும் அறிவர். மேலும், மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயிலிலும் வைகாசி அனுடத்தன்றே திருவள்ளுவருடைய நாள் விழாவை (குருபூசையை) நடத்துகிறார்கள். பல வருடங்களாக இந்தியாவிலுள்ள திருவள்ளுவர் கழகங்கள் பல இந்நாளையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருகின்றன. இக் காரணங்களாலேயே வைகாசி அனுடத்தை யாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட முடிவு செய்தோம்.”

அன்பர்கள் சிலர், இந்த இருநாளையுங் கொண்டாடினாலென்ன ? என்றும், இவற்றுள் ஒருநாளை அவர் தோன்றிய நாளாகவும் மற்றதை மறைந்த நாளாகவும் கொண்டாடுதல் கூடாதோ? என்றும் இந்த இரு நாட்களையும் விட்டுவிட்டு, வேறொரு நாளைக் கொண்டாடத் தொடங்கினால் என்ன ? என்றும், வைகாசி மாதத்தில் ஒரு நட்சத்திரத்தை ஏன் கொள்ளவேண்டும், ஒரு திகதியைக் கொண்டாலென்ன ? என்றும், திருவள்ளுவர் ஆண்டைத் தை மாதம் முதலாம் நாளிலிருந்து கணிக்கிறோம், ஆதலின் அந்த நாளையே கொண்டாடினாலென்ன ? என்றும், இன்னும் பலவாறும் எழுதியுளர். இவ்வாறே பல வேறு கருத்துக்களை அறிவித்தாலும் யாம் குறித்த நாளைத் தாமுங் கொண்டாடுவதாகவும், எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்குவதாகவும் அவர்கள் யாவரும் எழுதியுளர். அவர்களுடைய ஒற்றுமைப் பண்பும், திருக்குறட் பற்றும், கடமை யுணர்ச்சியும் எம்க்கு ஊக்கமளிக்கின்றன. யாம் குறித்த நாளை ஆதரித்து எழுதிய நண்பர்களும் பலராவர். இவர்கள் யாவருக்கும், எமது அறிக்கையினை வெளியிட்ட பத்திரிகை

களுக்கும் நன்றி கூறுகிறோம். எல்லோருக்கும் உகந்ததாக ஒருநாளைத் தெளிவுசெய்தல் முடியாதென்பதைக் காட்டவே அன்பர்களின் இக் கருத்துக்களை ஈண்டுக் குறிப்பிட்டோம்.

இனி, குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீன மகாசந்நிதானம் - திருவார் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் எமக்கு அனுப்பிய கடிதத்தில் உள்ள ஒரு பகுதியினைக் கீழே காண்க :

"திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்குரிய காலக் குறிப்பிலே நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. ஆண்டுக்கு ஒரு முறை எப்பொழுதோ ஒருநாள் திருவள்ளுவரை நினைவுகூர்ந்து அப் பெருமகனார் தம் அறவுணர்ச்சிகளை மக்களுக்கு உணர்த்தவேண்டும் என்பது தான் நமது குறிக்கோளாக இருந்தது. ஆதலால் தாங்கள் முடிவுசெய்த குறிப்புப்படியே வைகாசி அனுடத் திருநாளில் கொண்டாடுதற்குத் தடை இல்லை. ஆனால் இந்த ஆண்டிலே மாசித் திங்களில் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்று விட்டமையால் இந்த ஆண்டு மாசித் திங்களில் கொண்டாடுகிறோம். தங்களையொட்டி வைகாசி அனுடத்திலுங் கொண்டாடுகிறோம். அடுத்த ஆண்டிலிருந்து பேரறிஞர்கள் முடிவுப்படியே வைகாசி அனுடத்தில் விழாவைக் கொண்டாடுகிறோம். அன்புணர்ச்சி ஒன்றின் காரணமாகவே விழாவைக் கொண்டாடுவதாற் காலத்திற்குரிய சிந்தனையை நாம் செய்யவில்லை. தமிழ்நாடு மட்டுமின்றி வையகமெங்கும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட முயற்சிசெய்வது பெரிதும் போற்றுவதற்குரிய செயல். ஒவ்வொருவர் வீட்டிலுந் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுவதும் இன்றியமையாத ஒன்றுதான்."

மகாசந்நிதானம் அவர்களின் குறிக்கோளே நமது கழகத்தின் குறிக்கோளாகும். 'அன்புணர்ச்சி ஒன்றின் காரணமாக'த் திருக்குறளைப் போற்ற விரும்பும் மக்கள் யாவருங் கொள்ளத்தக்க சிறந்த குறிக்கோள் இஃதொன்றேயாகும். ஆதலின் தமிழ்மக்கள் யாவரையும் மகாசந்நிதானம் அவர்களைப் போலக் காலக் குறிப்பிலே கருத்தைச் செலுத்தாது இந்நாளைக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளு

கிறோம். இந்த நாளுடன் மாசி உத்தரத்தையும் வேறு நாட்களையுங் கொண்டாட விரும்புபவர்கள் நன்கு கொண்டாடுக.

வீடுகளிற் கொண்டாடும் முறைகள்

ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடவேண்டும் என்று யாம் கேட்டுக்கொண்டதைப் போற்றியும், கொண்டாடும் முறைகளைக் குறித்தும் அன்பர்கள் பலர் எமக்கு எழுதியுளர். எல்லாச் சமயத்தவரும் அன்பினலொன்றுபட்டு இன்பமாகக் கொண்டாட வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். தம்முடைய சமய வணக்க முறைகளையோ கொள்கைகளையோ தழுவித் தமது வீடுகளிலே கொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறே கொண்டாடுக.

செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 27-பரல் 6-இல் (தை 53) வெளிவந்த 'திருக்குறளைப் பரப்புஞ் சீரிய வழிகள்' எனுங் கட்டுரையினையும் அன்பர்களுக்கு நினைவூட்டுகிறோம். குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீன மகாசந்நிதானம் அவர்கள் கருத்தையும் இங்குத் தருகிறோம். "விழாத் திருநாளன்று இல்லங்களை மெழுகிக் கோலமிட்டு, புனிதப்படுத்தி, மாவிலை தோரணம் முதலியனவற்றால் அலங்கரித்துப் புனிதமான ஓர் இடத்தில் நல்லதொரு ஆசனத்தில் திருவள்ளுவர் திருமறையை வைத்து அவ்வாசிரியப் பெருமகனுரைப் பற்றிய பக்திப் பாடல்களை நினைந்தோதி, அந்நூலின் கோட்பாடுகளையும் ஓதி, மலர், தூபம், தீபம் முதலியன கொண்டு பூசித்துப் பின் இயன்ற அளவு ஒரு சில பாடல்களைச் சுற்றம் சூழ இருந்து ஓதி அமைதல் வேண்டும். பின்பு சமுதாயத்தை வாழ்விக்கும் சிறந்த பணிகளுள் ஒன்றாகிய சிலருக்கு அன்னமிடல், இத் தொண்டினை அவரவர் பொருள் நிலைக்கேற்பச்செய்தல்."

கடைசியாக வள்ளுவர்தம் தமிழ் மறையினை ஆதாரமாகக் கொண்டு எல்லார்க்கும் பொதுவான சில முறைகளையும் குறிப்பிடுகிறோம்.

> "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்" —தமிழ்மறை - 298

திருநாளன்று காலையிலே வீடுகளை மரபு முறைப்படி அழகுபடுத்துக; வீட்டிலுள்ளார் யாவரும் நீராடி நல்

லுடை முதலியன அணிந்து உள்ளத்தூய்மை உடையராகுக.

" உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து " —தமிழ்மறை - 596

பின்னர் திருக்குறளை உவகையுடன் எடுத்துப் பணிவுடன் அறன்வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை முதலிய அதிகாரங்களைப் படித்துணர்க. அவற்றைக் கேட்போர் யாவருக்கும் அவற்றின் பொருளை விளக்குக. அன்பைப் பெருக்கி அருளை வளர்த்து அறநெறியிலே வாழுதற்கு முடிவு செய்க.

" எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும் " —தமிழ்மறை - 416

திருவள்ளுவமாலைப் பாடல்களையும், திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய பிற பாடல்களையும் உரைகளையும் படித்தும் இசைப் பாடல்களைப் பாடியும் பாடுவித்தும் மகிழ்க.

" பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை " —தமிழ்மறை - 332

கடைசியாக விருந்தோம்புதல், பகுத்து உண்டு பல் உயிர்களையும் ஓம்புதல் முதலியன செய்க.

ஊர்களிலே கொண்டாடும் முறைகள்

காலையிலே வீடுகளிலே கொண்டாடிய பின்னர் மாலையிலே ஒவ்வொரு ஊரிலுமுள்ள கழகங்கள், சபைகள், சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவிலே திருக்குறள் ஊர்வலம், திருக்குறள் வகுப்புக்கள்—சொற்பொழிவுகள், பேச்சுப் போட்டிகள்—இசை விருந்துகள்—நாடக அரங்குகள் முதலியவற்றை நடத்துக. திருக்குறள் மாநாடு, திருவள்ளுவர் திருவிழா முதலியனவற்றையும் நடத்தலாம்.

இவ்வாண்டிலே திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் 15-ம் நாளாகிய வியாழக்கிழமை (28–5–53) என்பதை நினைவூட்டுகிறோம்.

" அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் " —தமிழ்மறை - 443

காமஞ்சான்ற ஞானப்பனுவல்

(புலவர் - முருகவேள், B.O.L.)

[மலர் - 26 ; இதழ் - 4 ; 182-ம் பக்கத்தொடர்ச்சி]

"புரங்கடந்தான் அடிகளைக் காணுமாறு வழிபட்டுக் காண்கையாவது, அன்னத்திற்குத் தாமரையும், பன்றிக்குக் காடுமாதலால், இவர் இங்ஙனம் தத்தம் நிலைப்பரிசே தேடுதல். இவ்வாறு தேடாது தமது அகங்காரத்தினால் மாறுபட்டுப் பன்றி தாமரையும், அன்னம் காடுமாகப் படர்ந்து தேடுதலால் கண்டிற்றிலர் (86) அன்பர்க்கு ஆரத் தழை அன்பருளி நின்றோன் - அன்பராயினார்க்குத் தானும் மிக்க அன்பைப் பெருகச் செய்து நின்றவன், அன்பர்க்கு அவர் நுகரும் வண்ணம் மிக்க அன்பைக் கொடுத்தோன் ; அன்பான் வரும் காரியமேயன்றி, அன்புதானும் ஓர் இன்பமாகலின் நுகர்ச்சியாயிற்று (91) குத்துக்கோல் வரைத் தன்றி யானை களிவரைத் தாயினாற் போலக் கழறுவார் சொல் வயத்தனன்றி வேட்கை வயத்தனாயினான் என்பது போதரக் 'கழை காண்டலும் சுளியும் களியானை யன்னான்' என்றாள். ("களிறனான் அமைச்சர் தம்முட் கட்டியங் காரன் என்பான்" (200) எனவரும் சிந்தாமணியுள், 'மதச் செருக்கால் பாகன் தோட்டியை நீவுமாறு போலக் காமக் களிப்பால் தன் அமைச்சர் கூற்றைக் கடத்தல் நோக்கிக் 'களிறனான்' என்றார்" எனவரும் உரையும் ஈண்டுக் கருதற்பாலது. சிவதத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் அவளத்தனும் என்றும், சத்தி தத்துவத் தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றலின் மகனும்என்றும் கூறினார். 'இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்' என்பதூஉம் அப்பொருண்மேல் வந்தது. (112)

"வலியனவற்றை வயமாக்கிப் பயின்று பின் என்னை யாண்டான் என்பது போதர, 'காய்சிலையாண்டு என்னை ஆண்டுகொண்ட, என்றார். என்னைத் தனக்கடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின் மேலிட்டுக் கல்லை வளைத்தான் ; என்னை நெஞ்சை வளைத்தல் காரணமாக அல்லது, தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்று போலும் என்பது கருத்து. 'கல்லை மென்கனியாக்கும்

விச்சைகொண்டு என்னை நின்கழற்கு அன்பனாக்கினாய்' என்பதுமது (114). நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும், எழிலுடைமையான் அக்கோலங் தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ள வினை நீரும் என்னும் கருத்தான், 'வினைவளம்நீறெழ நீறணி அம்பலவன்' என்றார். புதல்வனது பிணிக்குத் தாய் மருந்துண்டாற் போலத் தொழுதெழுவார் வினைக்குத்தான் நீறணிந்தான் என்பாருமுளர் (118). சென்று கிண்கிணி வாய்க்கொள்ளும் என்பதனால், பேதைப்பருவம் கடந்து இன்பப் பருவத்தளாயினாள் என்பது விளங்கும். 'கள் அகத்த கழுநீர் மலர் இவள்' என்றதனால், புலப்படாது உள்நிறைந்த காதலள் என்பது விளங்கும். 'பெருநீர்மை அளிகுலம்' என்றான், கழுநீர் மலரல்லது ஊதாமையின்; அதனால் பிறிதோரிடத்தும் தன்னுள்ளம் செல்லாமை விளங்கும் (123).

'நினைவித்துத் தன்னை என் நெஞ்சத் திருந்து அம்பலத்து நின்று புனைவித்த ஈசன், —தானேவந்திருந்து திருத்த வேண்டுதலின், என் நெஞ்சத்துப் புகுந்திருந்து தன்னை யான் நினையும்வண்ணம் செய்து, அம்பலத்தின்கண் தன் திருமேனி காட்டிநின்று, என்னால் தன்னைப் புகழ்வித்துக் கொண்ட ஈசன்; ஒருகால் தன்னை நினைவேனாகவும் செய்து, அங்ஙினைவே பற்றுக்கோடாகத் தான் புகுந்திருந்தோன் (140). கனைகடற்செய்த என்றதனான் நஞ்சின் பெருமை கூறினார். செய்யாத நஞ்சிற் செய்த நஞ்சு கொடிதாகலின், அதன்கொடுமை விளங்கச் 'செய்தநஞ்சு' என்றார். அமிழ்தாதல் அமிழ்தின் காரியத்தைச் செய்தல். கண்டார்க்கு என்றதனான், அல்லாத அமிழ்தோடு இவ்வமிழ்திற்கு வேற்றுமை கூறியவாரும் (141) யாமொரு குணமும் இல்லேமாயினும் தமது விருப்பினால் எமக்குப் புகலிடமாயினார் என்னும் கருத்தால், புகல் எமக்காம் விருப்பர்க்கு என்றார் (143).

"பொதுவினில் தீர்த்து என்னையாண்டோன் - அதுவோ இதுவோ வழியென்று மயங்கிப் பொதுவாக நின்ற நிலைமையை நீக்கி என்னை ஆண்டவன்; எல்லாரையும் ஆளும் பொதுவாகிய முறைமையினின்று நீக்கி என்னை உளம் நெகிழ்விப்பதோர் உபாயத்தான் ஆண்டவன் (146) தாம் செத்து உலகாள்வார் இல்லை (149) எல்லாரானும்

திருமகள் நயக்கப் படினல்லது திருமகள் தன்னுல் நயக்கப் படுவது ஒன்றில்லை(164) நரகம் என்றது ஈண்டுப் பிறவியை. வீடுபேற்றின்பத்தோடு சார்ந்த நரகமும் சுவர்க்கமும் ஒரு நிகரனவாகலின், நரகம் என்ருர் (166) தில்லையான் அருள் பெற்ருர் உலகியல்பினராய் நில்லாமையின், அவ்வருளுலகத் தார்க்கு அலராம் என்பது கருத்து. 'நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமுமவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' என்றதும் அக்கருத்தே பற்றி வந்தது (180). ஆட்கொள்ளுமவர் பெருமை தோன்ற 'உடையவன்' என அவன் பெருமை விளக்கும் பெயர் ஆண்டுக் கூறினுர். (185)புலியூரை யுணர்ந் தார்க்குப் பின்னை மறத்தல் அரிது என்னும் கருத் தான், 'மறப்பான் அடுப்பதோர் தீவினை வந்திடின்' என் ருள். புலியூரை ஒருகால் உணர்ந்த துணையானே பிறவி கெடுமன்றே; அவ்வாறன்றி அதனை மறந்த வாற்ருனே பிறக்கக்கூடினும் என்னும் கருத்தால், பிறப்பான் அடுப்பினும் என்ருள் (205) கண்டார்க்கு இன்பம் செய்தலின் நாடகம் என்ருர் (219) என் நெஞ்சகத்தே பயில் எனப் பேர்ந்தறியாதவன் — என் நெஞ்சின் கண்ணே தனக்குப் பயிற்சி என்று பலர் சொல்லும் வண்ணம் என் நெஞ்சினின்று நீங்கி யறியாதவன், என் நெஞ்சின் கண்ணே நீ பயிலவேண்டும் என்று ஒருகால் யான கூறப் பின் நீங்கி அறியாதவன் (224) காக்கையின் குணங்கள் ஐந்தாவன, மறைந்த புணர்ச்சித்தாதலும், கலங்காமையும், பொழுதிறவாது இடம் புகுதலும், நெடுகக் காண்டலும், மடியின்மையும் (235) பரந்து வரும் பெரும் புனலை வேகம் தணித்துத் தன் சென்னியின்கண் வைத்தாற் போல, நில்லாது பரக்கும் நெஞ்சை யுடையேனைத் தன் அருட்கண் அடக்கினுன் என்பது கருத்து (261) இழிந்தன கைக்கொள்வானுகலின் என்டை அணியாகவும் என்னை அடிமையாகவும் கொண்டான் (277) உண்மையாற் காரண மாவனவும், உணரப்பட்டாற் காரணமாவனவும் எனக் காரணம் இருதிறத்தன (277) துறந்தார் கருதுவதாகிய மறுமை இன்பம், அரசர் கருதுவதாகிய இம்மை இன்பம் என்னும் இரண்டனையும் பொருள் முடிக்கும் (332) இறை வன் பாம்பையும் மதியையும் தம்மிற் பகையறுத்து ஓரிடத்தே விளங்கவைத்தான் (381).

இனி, இங்ஙனம் தொடர்கட்குப் பொருள்விரிப்பதோடன்றிச் சில தனித்தனிச் சொற்களுக்குப் பொருள் வரையறை செய்தலிலும் பேராசிரியர் சிறந்து விளங்குகின்றார்; அவற்றுள் சிலவற்றையும் ஈண்டுத் தொகுத்துத் தருதல் நலம் பயக்கும். "திரு—கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம் (11) பயிர்ப்பு—பயிலாத பொருட்கண் வந்த அருவருப்பு (12) கலி — புகழான்வரும் ஆரவாரம் (20) கோம்பி — ஓந்தி (21) தையல் — புனையப்படுதல் (60) யாவையுமாம் ஏகம் — பராசக்தி (71) பரிசகம் — சித்திரசாலை; படிச்சந்தம் ஒன்றன் வடிவை யுடைத்தாய் அதுவென்றே கருதப் படும் இயல்புடையது (78) குதலைமை - விளங்காமை, மழலை - இளஞ்சொல் (104) குரு-நிறம் (156) வம்பு - காலமல்லாத காலத்து மழை (159) அங்கராகம் - பூசப்படும் மணப்பொருள்கள்; இராகம் - கதிர்ப்பு, நிறம் (194) சோத்தம் - இழிந்தார் செய்யும் அஞ்சலி (173) சீவன் முத்தராயிருத்தல் - சீவனுடன் இருக்கும்போதே முத்தியை யடைந்திருத்தல்; முத்தியாவது எங்கும் ஒக்க வியாத்தியை அடைந்திருத்தல் (197) முரம்பு - கல்விரவி உயர்ந்திருக்கும் நிலம் (202) ஆள்அரி - நரசிங்கமாகிய மால் (225) வலக்காரம் - விரகு (227) முதுக்குறை பெற்றி - அறிவு முதிர்ந்த இயல்பு (232) சேட்டை - உறுப்பைப் புடை பெயர்த்தல்; (மூதேவி) (235) சுத்தி - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பி வடிவாகத் தலையோட்டான் அமைக்கப் படுவதொன்று; கடங்கம், கட்டங்கம் - மழு (242) செல்வு - இருமுதுகுரவராற் கொண்டாடப்படுதல் (266) உறுவரை - முற்றூட்டு (356) உலகியலாறு - பூப்பு (361) மாத்து - பெருமை, தலைமகற்கு உரியளாய் நிற்றலின் உண்டாகிய வரிசை(373) ஈற்று - கடுஞ்சூல் நாகன்றிப் பலகால் ஈன்ற ஆ (382) கித்தம் - விரைவு (388) வேண்டாமைக் கொடுப்பது கார், வேண்டர் கொடுப்பது கற்பகம், நினைத்தது கொடுப்பதுசிந்தாமணி, நட்டார்க்கும் பகைவர்க்கும் தப்பாது பயன் கொடுப்பது விதி (400).

இங்ஙனமே பலவகை அணிநலங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டுதலிலும் பேராசிரியர் சிறந்து விளங்குகின்றார். உடனிலைச் சிலேடை (1) ஐயநிலையுவமம் (2) இல்பொருள் உவமை (125) (244) இரங்கல் விலக்கு, உபாய

விலக்கு (157) பரியாயம் (261) புகழாப் புகழ்ச்சி (261) இரு பொருட்கண் வந்த உயர்ச்சி வேற்றுமை (217) நோக்கு (233) முயற்சி விலக்கு (234) பரியாயம், பொருள் முரண் (289) சிலேடை (85, 327, 352, 365) நிரல்நிறை (332) குறிப்பு நுட்பம் (151) புகழுவமை (162) ஒற்றுமை கொளுவுதல் (195) என்பன முதலாகக் கண்டுகொள்க.

தொகுப்பு முடிப்புரை

இதுகாறும் கூறி வந்தவாற்ருல், மாணிக்கவாசகரது திருவாசகம் போலத் திருக்கோவையாரும் ஒரு சிறந்த தெய்விகப் புனிதநூல் என்பதும், பலபெருஞ் சான்ருேர்கள் தொன்னெடுங் காலமாக வழிவழியே தம் உயிரினும் இனிய விழுமிய நூலாக அதனைப் போற்றி வந்துள்ளனர் என்பதும், அதற்கேற்பக் குமரகுருபர அடிகள் அதன் சிறப்பினை ஆராய்ந்து, "காமம் சான்ற ஞானப் பனுவல்" என்று போற்றிப் புகழ்ந்தது பெரிதும் பொருத்தமாம் என்பதும், தூய காமச்சுவை மலிந்து ஞானப்பொருள் பொதிந்த இந்நூலை யாத்த மாணிக்கவாசகரின் குறிக்கோள் இது என்பதும், அவர் சங்க நூற்பயிற்சியில் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பதும், சங்கநூல் வளங்களெல்லாம் திருக்கோவையாரின்கண் விளங்கித் திகழ்கின்றன என்பதும், பன்னிரு திருமுறைகளுள் பழுதற்ற உரை பெற்றதாக இந்நூலுக்கு ஒரு பெருமை தந்த பேராசிரியரின் உரை நலங்கள் இவை என்பதும் ஒருவாறு இயன்ற பெற்றி விளக்கப்பெற்றன. இத்தகைய தெய்விகப் புனிதச் செந்தமிழ் அமிழ்தக் கவிதைத் திருநூலைப் பலகாலும் ஓதிப் பயின்று, மக்களெல்லாம் இன்புற்று நலமெய்துக என வேண்டி, இறையருளை வாழ்த்தி அமைகின்றேன். தமிழ் வெல்க!

பிற்சேர்க்கை

உள்ளுறைத் தொகுப்பு

"யாவரும் அறியா இவ்வரைக்கண் வைத்த தேன் முதிர்ந்துக்கு அருவிபோன்று எல்லாருங் காணத் திசை திசை பரந்தாற்போல, கரந்த காமம் இவள் கதிர்ப்பு வேறுபாட்டால் புறத்தார்க்குப் புலனுய் வெளிப்படா நின்றது." (128).

" ஈ விளையாட்டாற் றேன்விளைவை யோர்ந்து எமர் மால்பு இயற்றுமாறு போல, கதிர்ப்பு வேறுபாட்டால் இவள் உள்ளத்துக் கரந்தகாமம் உணர்ந்து மேற்செய்வன செய்யக் கருதா நின்றார் " (133).

" கானக் குறவர்கள் தமக்கு உணவாகிய தினைக்கதிர் கோடையால் அழியத் தெய்வத்தைப் பராவி மழை பெய்விக்க முயல்கின்றாற்போல, நினக்குத் துப்பாகிய இவள்நலம், அலர் முதலாயினவற்றால் தொலையும் வழி அது தொலையாமல் முயன்று பாதுகாப்பாயாக " (159)

" வேயிற் பிறந்த தீ ஆண்டு அடங்காது சென்று தேவருலகத்தில் நின்ற கற்பகச் சோலையைக் கதுவினாற் போல, நின்வரவினால் அயலாரிடத்துப் பிறந்த அலர் பெருகி நின் ஊரும் அறியப் பரந்து நின்பெருமையைச் சிதைக்கும் " (168).

" வளரும் இளங்கறி கண்ணிற் கினிதாய் இருத்தலின் இது நமக்குத் துய்க்கப் படாதென் றுணராத இளமந்தி அதனைத் தின்று வருந்துமாறு போலக் கண்ணும் மனமும் மகிழும்உருவினையாகிய நின்னை நின்பெருமை யுணராது எதிர்ப்பட்டு வருந்தா நின்றாள் " (193).

" எழுங்குலையும் உதிர்ந்த குலையும் உடைமையான் இடையறாது பழுக்கும் வாழைத் திரளின்கண் உண்டாகிய கனியை நுகர்ந்து, மந்தி வேறொன்றான் வெருவாது, அவ் வாழை நிழலின்கீழ் இன்புற்றுத் துயிலுமாறுபோல, ஆரா இன்பம் இடையிட்டு நுகராது, நீ வரைந்து கோடலான் இடையறாத பேரின்பம் துய்த்து, அன்னை சொல்லால் உள்நடுங்காது நின்தாள் நிழற்கீழ் இவள் இன்புற்று வாழ்தல் வேண்டும் " (250).

" சிறார் எறிந்த மணியால் பெருந்தேன் சிதைந்து அவ் இறாலை விட்டுக் கழிந்து, சிறுகுடிலிற் பரந்தாற்போல, அயலார் கூறும் அலரான் நுமது மறைந்த ஒழுக்கம் நும் வயின் அடங்காது பலரும் அறிய வெளிப்படா நின்றது " (251)

" வழியல்லா வழிச் சேறலான் அசும்பிற்பட்ட களிற்றினை வாங்குதற்குப் பிடிமுயல்கின்றாற்போல, இவனை எய்துதற்கு உபாயம் அல்லாத இவ்வொழுக்கத்தினை விரும்பும்

நின்னை இதனினின்று மாற்றுதற்கு யான் முயலாநின்றேன் " (254).

" துணை புறங்காக்கும் கடுவனைக் கண்டு, விலங்குகளும் இவ்வாறு செய்யா நின்றன; இது நம் காதலர்க்கு நம்மாட்டு அரிதாயிற்று என நீ வரையாமையை நினைந்து ஆற்றாளாயினாள் " (257).

" குறவர் பரவும் பருவத்துத் தெய்வத்தைப் பரவாது, பின் மழை மறுத்தலான் இடர்ப்பட்டு அதனை முயல்கின்றாற்போல, நீயும் வரையும் காலத்து வரையாது, இவளை எய்துதற் கரிதாகிய இடத்துத் துன்புற்று வரைய முயல்வாய் " (260).

நின் மலைக்கண் விலங்குகளும் இத்தன்மைத்தாகிய தேனைக் குறியாதுண்டு இன்புறா நின்றனவாகலிற் குறித்தவற்றின் நினக்கு அரியது யாது. இதுவன்றோ பருவமும் என வரைவு பயப்பக் கூறியவாறு (262).

"அணைதற்கரிய களிற்றின் மருப்பினின்றும் உக்க முத்தத்தினது அருமையைக் கருதாது, தமக்கு இன்பம் செய்யும் வேரிக்குக் கொடுத்தாற்போல, என்னையரது காவலை நீவி நின்வயத்தளாகிய இவளது அருமை கருதாது நினக்கு இன்பம் செய்யும் களவொழுக்கம் காரணமாக இகழ்ந்து மதித்தாய் " (265).

"சேவல் அன்னம் தன் சூல் முதிர்ந்த பெடைக்கு ஈனில் இழைத்துப் பாதுகாக்கின்றாற்போல, இவனும் தன் காதலிக்கு வேண்டுவன செய்து, மனைவயிற்றங்கி இன்புறுகின்றான்" (369).

" இறைவன் பாம்பையும் மதியையும் தம்மிற் பகையறுத்து ஓரிடத்தே விளங்க வைத்தாற்போல, தோழியாகிய நீ (இறைவன்) தலைவனாகிய என்னையும் (பாம்பு) தலைவியையும் (மதி) வெறுப்பைத் தீர்த்து விளங்க வைத்தல் கடன் எனத் தலைவன் கூறினான் " (381)

—

சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம்

47-வது ஆண்டு நிறைவுவிழா, ஈரோடு

சைவர் மாநாட்டுத் தலைமையுரை

(குன்றக்குடி ஆதீன கர்த்தர் அவர்கள்)

[24—4—53]

கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை சால அழகுடைத்தே.

சித்தாந்த சைவப் பெருமக்களே! தாய்மார்களே! மறைத்திரு ஞானியாரடிகளின் அருள் உள்ளத்தில் அரும்பி அன்பர்கள் உள்ளத்தில் மலர்ந்து தொண்டர் தம் தொண்டின் திறத்தால் பல்லாண்டுகளாகத் தென் தமிழ் நாட்டில் தெய்வ மணத்தை வழங்கிவருகின்ற சைவ சித்தாந்த சமாஜத்தின் ஆண்டுவிழாவில் கலந்துகொள்ள வண்ணப் பணித்து வாவென்று வான்கருணை செய்த ஈரோடை அப்பரின் இணையடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். இத்தகு இன்பப் பேற்றை நமக்கு அளித்த அருள்நெறித் திருக்கூட்டத் தொண்டர்களுக்கு நமது நெஞ்சம் கலந்த வாழ்த்து.

தமிழகம் தெய்வ மணம் கமழும் திருநாடு. இறை மணம் கமழும் இன்பத் திருநாடு. சாத்திரத்திலும் உயர் ஞானத்திலும் சிறந்து விளங்கும் பெருமை செந்தமிழ் நாட்டிற்கே உரியது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றி மூத்தகுடி தமிழ்க்குடி. அன்று தொட்டே அவர்களது வாழ்க்கையில் சமய வாழ்வு இடம் பெற்றிருந்தது. அறிவுக் கண்கொண்டு இப் பரந்துபட்ட உலகியலைக் காண்கின்ற பேறு பெற்றபொழுது — அகலமும் ஆழமும் அளவிடப் பெறாத நீலத்திரைக் கடல் — காலம் தவறினும் தான் தவறாது எழுந்து நல்லொளி பரப்பி

ஞாலத்தை வாழ்விக்கும் ஞாயிறு — வானுயர் தோற்ற மன்ன மலை, இவை போன்ற இயற்கையின் மதிப்பிட முடியாத அமைப்புகளைக் கண்டு வியந்தனர். உலகியலில் ஓர் ஒழுங்கு — ஒரு முறைபிறழாத நிகழ்ச்சி முதலியன அமைந்து கிடப்பதனைக் கண்டனர். இத்தகு அமைதிகளைக் கண்டு இவை தம்மை அமைத்துக் கொடுப்பதற்குரியது மனித எல்லைக்கும் அப்பாற்பட்டது என்று உணர்ந்தனர். அந்த ஒன்று பேரறிவும், பேராற்றலும் உடையது என்ற முடிவுக்கு வந்தனர். அப்பொருள் அப்பாலுக்கப்பாலாய் இருந்தும் ஊனாகவும், உயிராகவும், உயிர்ப்பாகவும் இருப்பதை உணர்ந்தனர். இத்தகு நிலையில் காட்சியளிக்கின்ற அந்தப் பொருளை எங்ஙனம் சிற்றறிவுடைய உயிர்கள் வாழ்த்தமுடியும்? இதனை நமது மணிவாசகப் பெருமானார்,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே."

என்று அருளிய திருப்பாடலால் அறியலாம்.

தமிழர் சமயத்தில் ஆண்டான் அடிமைத் திறம் மிகச் சிறந்தது. இன்று அடிமையென்ற சொல் மக்களினத்தால் வெறுக்கப்படுகிறது. ஆனால் அடிமை என்ற சொல் அவ்வளவு தீயதல்ல. அடிமைத்தனத்தில் உள்ள நன்மை தீமைகள் அடிமையாக ஆட்படும் இடத்தைப் பொறுத்தது. சின்னாட் பல்பிணி வாழ்க்கைக்காகச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய இறக்கும் தன்மையை இயல்பிலேயே பெற்ற மக்களிடம் அடிமைப்படுவதில் இகழ்ச்சி உண்டு, தீமையும் கூட உண்டு. ஆனால் வரம்பில் ஆற்றலும் இணையில் இன்பமும் உடைய பிறவா யாக்கைப் பெரியோனிடத்தில் அடிமைப்படுவது சாலவும் நன்மையுடைத்து. அடிமைப்படாததால் தீமை கூட விளையலாம். இத்தகு அடிமைத் திறத்தை நினைந்து நினைந்து வரவேற்றார்கள் தமிழ்ச் சான்றோர்கள். அருள்மொழி மணிவாசகப் பெருமானார் அருளிய திருவாசகத்திலே அடிமை வேண்டிவேண்டிக் கேட்கப்படுகிறது. தேசிய கவிதை முழக்கி விடுதலை முரசுகொட்டிய தேசியக் கவிஞர் பாரதியாரும்,

'பூமியில் எவர்க்கும்மினி அடிமைசெய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்துவாழ்வோம்.'

என்று கூறுகின்றார். சமய வாழ்வில் கூறப்படும் அடிமை குற்றேவலுக்காக அல்ல. எண்ணத்தால் அடிமை.

தமிழர்கள் வாழ்வில் நீதி பொருந்தியிருந்தது. நேர்மை நிலவியிருந்தது. அன்பு மலர்ந்திருந்தது. அற வுணர்வு மண்டியிருந்தது. அவர்கள் மறந்தும் கூடத் தீயன செய்த தில்லை. செய்ய நினைத்ததுமில்லை. அவர்களுடைய வாழ்க் கையில் அகமும் புறமும் ஒத்திருந்தது. சிந்தனையும் செய லும் ஒன்றுபட்டிருந்தது. பிறர்நலம் பேணுகின்ற பெரு மனம்பெற்றிருந்தார்கள். காரணம் கடவுட்பற்று. கடவுள் நம்பிக்கை. சென்ற சென்ற இடத்திலெல்லாம் சென்று பற்றுகின்ற அறிவைத் தீதினின்றும் விலக்கி நன்மையின் கண் உய்ப்பது சமயம். விலங்கு நீர்மை பொருந்திய பொல்லாத புல்லிய உணர்ச்சிகளினின்றும் விலக்கிப் பூரண மனிதப் பண்பை நல்கி அருள் உள்ளத்தைக் கொடுப்பது சமயம்! மகவெனப் பல்லுயிரையும் ஒக்கவே பார்க்கும் பண்பைக் கொடுப்பது சமயம்! ஏன்? "காக்கை குருவி எங்கள் சாதி" என்ற பேருணர்வைக் கொடுப்பதும் சமயமே? வாழ்க்கையை வளம் படுத்துவது நல்லெண்ணங் கள். தனி மனிதனின் வாழ்வைச் செம்மைப்படுத்துவது சிந்தனையும் செயலுமாம். சமுதாயத்தைச் சீர்படுத்துவது தனி மனிதனது ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கை. தனி மனி தன்து ஒழுக்கம் குலையுமானல் சமுதாயம் குலைந்துவிடும். அதனல் குற்றங்கள் நிறைந்து கொலைகள் பெருகும். உறுப் பாலே மக்கள்; வாழ்க்கையாலே விலங்குகள் என்றாகி விடுவர். எனவே நாட்டின் நல்வாழ்வு, சமுதாயத்தின் சிறப்பு எல்லாவற்றிற்கும் அடிப்படை தனி மனிதனின் ஒழுக்கம் பொருந்திய வாழ்வுதான். அப்படியானல் வேண்டு வது ஒழுக்கம்தானே! அது இருந்தால் போதாதா? என்று சிலர் கேட்கலாம். சமயச்சார்போடு வளர்கின்ற ஒழுக்கந் தான் நிலைத்து நிற்கும். சமயச் சார்பற்ற—கடவுள் நம் பிக்கையற்றவர்களின் ஒழுக்கம் என்றும் நிலைத்திருக்காது. குறிப்பாக, சமயச்சார்பற்றவர்களின் ஒழுக்க நெறி 'ஊற் றில்லா ஓடை போன்றது; வேரில்லா மரம்போன்றது;

மணற் பரப்பின்மீது கட்டப்பெற்ற மனைபோன்றது' என்று கூறிவிடலாம். அதாவது வாழ்க்கையின் தேவை நிறைந்திருக்கிற வரையில் – இன்பம் பொருந்தியிருக்கின்ற அளவில் சமயச் சார்பற்றவர்களின் ஒழுக்கம் நிலைபெற்றிருக்கும். ஆனால் தேவை நிறைவுபெறாதபோது, வாழ்க்கையில் துன்பப் புயல் சுழன்றடிக்கின்றபோது, துன்பச் சுழலினின்றும் விடுதலைபெற்றுத் தேவையை நிறைவு செய்து கொண்டு இன்பத்திற் பொருந்தி வாழ்வதற்காகத் தாம் கொண்ட ஒழுக்க நெறியினின்றும் நழுவுவர். அப்படி நழுவ நேரிடுங்காலத்துச் சிலகால வாழ்வுக்கு நீதியையும் நேர்மையையும் பலிகொடுக்காதே ; அநீதிக்குத் தண்டனை தரத் தலைவன் ஒருவன் உளன் என்று உணர்த்தி நல் வாழ்வில் நிலைக்கச்செய்வது சமயம். எனவே வாழ்க்கையில் ஒழுக்கம் உறுதிபெறச் சமயவாழ்வு வேண்டியிருக்கிறது.

இந்த உண்மையைப் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அவர்களது வாழ்க்கையில் சமயப்பண்பியல்புகள் கலந்து படிந்திருந்தன. அவர்கள் தம் சிந்தனையிலும் செயலிலும் கடவுட் பற்றும் நம்பிக்கையும் கலந்திருந்தது. அவர்களுடைய தனி வாழ்வு, பொது வாழ்வு ஆகிய இரண்டிலும் சமயப் பண்பாடு முதலிடம் பெற்றிருந்தது. அவர்களுடைய வாழ்க்கையில் வழிபாட்டுணர்ச்சி வளர்ந்து வளம்பெற்றிருந்தது. வாழ்த்துகின்ற கலையன்றி வசை பாடும் கலையை அறியார். விண்ணை அளந்து காட்டுகின்ற – துன்பம் துடைத்து நல்லின்பம் நல்குகின்ற எண்ணற்ற ஆலயங்கள் தமிழகத்தில் எழுந்தன. எழுச்சிக்கு அடிப்படை பண்டைப் பெருமக்களது சமய வாழ்வும் வழிபாட்டுணர்ச்சியுந்தான். தமிழகம் கண்ட சமய நிலையங்கள் இரண்டு வகையன. ஒன்று ஆலயங்கள். பிறிதொன்று மடாலயங்கள். ஆலயங்கள் வழிபாட்டு நிலையங்கள். பண்புகள் பல்கி – பக்தி உணர்ச்சி வளரத் துணை செய்பவை ஆலயங்கள். உணர்ச்சிக்குத் தூண்டுகோல் – காவலிடம் ஆலயங்கள். நல்லறிவு கொளுத்தித் தெளிவான உள்ளம் தந்து நல்லுணர்வை நல்கி – கொள்கையைப் பரப்பிக் – காக்கும் காவல் நிலையங்கள் மடாலயங்கள். ஒன்று உணர்ச்சியை உண்டாக்கி வளர்த்துக் காக்க ; இது மடாலயங்களின் தொண்டு. நல்லுணர்ச்சியைப் பக்தி

யாக மாற்றி வழிபாட்டிற் கலந்து இன்புறச் செய்வது. இவை ஆலயங்களின் தொண்டு. இவ்விரு வகை நிலையங் களையும் கண்டு அன்பு பேணி அருளுள்ளம் கொண்டு அறம் பல வளர்த்துக் களிப்புடன் வாழ்ந்த பெருமை பண்டைத் தமிழினத்திற்கு உண்டு. ஒரு சில ஆண்டு களாகத் தமிழினத்தின் வாழ்வை இருட்சூழல் கவ்வி யுள்ளது. கிப்ஸன் சொன்னபடி இவ்வுலகுபற்றிய அறிவு மிக மேம்பட்டுள்ளது. மற்ருெரு மீளா உலகைப்பற்றிய அறிவு குறைந்து வருகிறது. சிறப்பாக வாழ்க்கை யோடி யைந்த சமயப் பண்பு அருகிவந்துவிட்டது. வாழ்க்கை வேறு; சமயம் வேறு; சடங்கு வேறு என்ற புல்லிய உணர்ச் சிக்கு ஆட்பட்டுவிட்டனர். இதனுல் இதயம் மடிந்தது. எலும்புடம்பு இருக்கிறது. நெஞ்சம் தோய்ந்த சமய வாழ்வு குறைந்து வரலாயிற்று.

தமிழினத்தின் தனிமைப் பண்பு சமரசநோக்கு. தமிழ் கண்ட உன்னத உயர்மொழி 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பதாம். இடையில் இந்த நிலை மாறியது. சமய வாழ்வில் சாதி முதலிய புல்லிய உணர்ச்சிகள் தோன்றி வளர்ந்தன. அகவுணர்வைப் போற்றிக் காத்துக்கொள்வ தற்காகக் கையாளப்பெற்ற சமயச் சடங்குகள் சடங்குகளா கவே காட்சியளித்தன. நெஞ்சந் தோய்ந்த சமய வாழ்வு இல்லாமற்போய்விட்டது. புறம் வளர்ந்தது, அகம் தேய்ந் தது. அதனுல் தமிழகம் மிகத் தாழ்ந்துவிட்டது. தாழ்ந் தமைக்கு ஒரு சில எடுத்துக்காட்டுகள். தமிழ் நாட்டிற் பிறந்தாரனைவரும் தமிழர்கள். பாதிக்கு மேற்பட்ட மக்கள் சைவத்திருநெறி நின்று ஒழுகுகின்ற பேறுபெற்றவர்கள். ஏனைய மக்களில் பெரும் பகுதியினர் வைணவக் கொள்கை யினர். ஒருசிலர் பிற சமய மக்களும் உண்டு. இங்ஙனம் வாழ்ந்த நூற்றுக்கணக்கான சைவக் கொள்கையினர் பிற மதம் புகுந்து கொண்டேயிருந்தனர். ஆயிரக்கணக்கான ஆலயங்களிருந்தும், நூற்றுக்கணக்கான மடாலயங்க ளிருந்தும் இவை தமக்கு மூன்றரை கோடி ரூபாய் வரு மானம் இருந்தும் பிற மதம் புகுகின்ற சகோதரர்களைத் தடுக்கவில்லை. தடுக்க நினைக்கவும் இல்லை. இதனுல் இவற் றிற்கு விளைந்த கேடு எண்ணும் தரத்ததா? பிற மதத்தினர் தம் மதப் பிரசாரத்திற்காக, சைவத் திருநெறியின் கொள்

கைகளைச் சிறப்பாக, உருவ வழிபாட்டுக் கொள்கையினை எள்ளி நகைத்துப் பேசிவந்தனர். ஏனென்று கேட்பார் இல்லை. இதனையொட்டி நம்மவரினும் பலர் சமய வாழ் வினையும், வழிபாட்டினையும் இழித்து எள்ளிப் பேசத் தலைப்பட்டனர். இவ்வியக்கம் சாதி ஒழிப்பியக்கமாகத் தோன்றிச் சமய ஒழிப்பியக்கமாக மாறிவிட்டது. மூலை முடுக்குகளில் எல்லாம் நாத்திகம் பரப்பப்பெற்றது. சிறந்த இலட்சிய நெறியினின்று வாழ்ந்த பெருமக்களின் வரலாற்றினை இன்பத் தமிழில் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடித் தந்த சேக்கிழார் பெருமான் எள்ளப்பெற்றார். அவர் தம் திருநூல் எரிக்கு இரையாக்கப்பட வேண்டுமென்று பேசப் பெற்றது. அது போலவே ஊனினை உருக்கி உயிரையும் உருக்கி உலப்பிலா ஆனந்தத்தைக் கொடுக்கும் அருமைத் திருவாசகத்திற்கும் எரியிடவேண்டுமென்று ஆர்ப்பரித்தார்கள். தமிழ்நாட்டின் ஒருசில ஆலயங்களில் சில ஆண்டுகளுக்குமுன் புகருத்து வேற்றுமையின் காரணமாகத் தகாத செயல்களையும் செய்யத் தலைப்பட்டனர். செய்தும்விட்டனர். எனினும் கவலைப்படுவார் யாருமில்லாத கதியற்ற நிலை சைவத்துக்கு இருந்துகொண்டிருந்தது. இந்த நிலை இன்னும் மாறவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இன்றும் பிற சமயத்தினரின் சமயப் பரப்பு வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது. நாத்திகர்களும் பெருகி உருவங்களை உடைப்பதும் திருமுறைகளைத் தீயில் இடுவதும் எங்கள் இலட்சியம் என்று ஆர்ப்பரித்துக்கொண் டிருக்கின்றனர். நாடாளும் அரசோ மதச் சார்பற்ற அரசு என்ற பேரில் இருக்கிறது. ஆதலால் இவை தம்மை எதிர்த்து நிற்பதில் அது நேரடியாகத் தலையிட முடியாது. இந்த நிலை சமயப் பற்றுள்ள ஒவ்வொருவருக்கும், சமயச் சான்றோர்களுக்கும், சமயத் தலைவர்களுக்கும் ஒரு சோதனை. இது கடைசி நேரம். இனியும் உறங்கினால் கடமையினின்று தவறியவர்கள் ஆகிவிடுவோம். இடம் பொருள் ஏவல் இருந்தும் இழக்கமுடியாத கொள்கையினை இழந்துவிட்டோம் என்ற பழிச்சொல்லுக்கு உரியவர்கள் ஆகிவிடுவோம். அன்புடைய பெருமக்களே! இதனைச் சிந்தனையில் பதித்துக்கொண்டு செயலில் இறங்குவோமாக! நமக்குத் தெரிந்த ஒரு சில ஆக்க வேலை முறைகளையும் குறிப்பிட ஆசைப்படுகின்றோம்.

1. நல்லன பெருகி அல்லன மறைய வேண்டுமானால் அதற்குரிய சாதனம் நல்லனவற்றைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுதலும் பரவுதலும் ஆம். முதலில் சமயச் சார்புடைய அனைவர்மாட்டும் நெஞ்சந் தோய்ந்த சமய வாழ்க்கையை மலரச் செய்யவேண்டும். வாழ்க்கையோடு ஒன்றுபட்ட சமயந்தான் நல்ல பயனைத் தரும். எனவே ஒவ்வொருவர் வாழ்விலும் பூரண பக்தி உணர்ச்சியை வளர்க்க வேண்டும். வீடுகளில், வீதிகளில், மன்றங்களில், ஆலயங்களில் எங்கும் தெய்வத் திருமறைத் தமிழ் முழக்கத்தை எழுப்பவேண்டும். நாள் தவறினும் நாழிகை தவறினும் தான் தவறாத முறையில் திருமுறைகளை ஓதுகின்ற பழக்கத்தினை மேற்கொள்ள வேண்டும். ஊர்தோறும் கூட்டு வழிபாட்டு இயக்கங்கள், பொதுப் பிரார்த்தனைகள் முதலியவற்றைத் தோற்றி வளர்க்கவேண்டும். இவை நம்மவர்பால் நடக்கவேண்டியவை.

2. சமய வாழ்வு வாழ்கின்ற பெருமக்களிடத்தும், சமய நிலையங்களிடத்தும் சாதி மனப்பான்மையை வளர விடக்கூடாது. உண்மைச் சமயத்திற்குச் சாதி உடன்பட்ட தல்ல. புறம்பானது என்று தெளிவாக அறிவிக்கவேண்டும். அப்படி அறிவித்து விடுவது ஒன்றாலேயே பெரும் பகுதி யான மக்கள் சமய வாழ்வுக்கு வந்துவிடுவர்.

3. சில ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் ஒரு மறு மலர்ச்சி. அதுதான் தமிழைப் பற்றியது. எங்கும் தமிழார்வம் தலையெடுத்து வளர்கிறது. தமிழன்பு பெருகி வருகிறது. தமிழன்பில் திளைக்கின்ற பல அன்பர்கள் திருக்கோயில்களில் தமிழுக்கு இடமில்லை என்ற ஒரு காரணத்தால் திருக்கோயில் வழிபாட்டுணர்ச்சிக்கு மாறு படுகின்றனர். திருக்கோயில்களில் தமிழுக்கு இடம் தருதல் தவறானதாகாது. வேண்டுமானால் பழக்கமெனும் பாசி படிந்த உள்ளங்கள் தவறானதாக நினைக்கலாம். மேற் பரப்பில் காட்சியளிக்கும் பாசியை நீக்கிப் பார்த்தால் அந்தப் பாசி இடையில் படர்ந்தது, வேர் ஊன்றாத பாசி. இயற்கையிலேயே தண்ணீர் தெளிவுதான். அதுபோலவே பண்டுதொட்டே ஆலயங்களில் தமிழ் முழக்கம் கேட்கப் பெற்றதுதான். ஏன் நலிவுற்ற காலத்து நல்லுணர்வு கொளுத்தி சைவம் பரப்பி நானிலத்தைக் காத்த நால்வர்

பெருமக்கள் இன்பத் தமிழில்தானே பாடினார்கள். எனவே சமய நிலையங்கள் தமிழைப் புறக்கணித்துத் தவறானதோர் செயலை விளைவித்துவிடவேண்டாமென்று குறிப்பிட ஆசைப்படுகின்றோம். விரைவில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழில் அர்ச்சனை செய்கின்ற பழக்கத்தைக் கையாள முன்வரவேண்டும். இதனால் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் மனம்மாறும். அவர்கள் தமிழன்போடு சமயப்பற்றிலும் சிறந்து விளங்குவார்கள்.

4. இனி சமயத்தை வளர்ப்பதற்குரியவழி, வீடு தோறும் செல்வதுதான். சமயச் சான்றோர்களும், சமயத் தொண்டர்களும் வீடுகள் தோறும் நுழைந்து பரிவாகப் பேசி, வீட்டில் நாள் தவறாது வழிபாடு அல்லது பிரார்த்தனையைக் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இருந்து செய்யும்படித் தூண்டவேண்டும். இங்ஙனம் செய்வதால் வீடுகளில் சமயம் விளக்கம்பெறும். வீடுகள் திருந்தினால் நிச்சயமாக நாடு திருந்தும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. இத்தொண்டினை யாரும் மேற்கொள்ளலாம். பொருட்செலவற்ற மிகச் சுலபமான தொண்டு. ஆனால் பெரும்பயன் விளைக்கின்ற பெருந்தொண்டு. வீடுதோறும் சமய விளக்கம் காண முயல்வோமாக!

எத்தனையோ ஆண்டுகளாகத் தமிழினத்தின் ஒரு பகுதியினர் தாழ்த்தப்பட்ட மக்களாக ஒதுக்குப்புறத்தில் வாழ்கின்றனர். அவர்கள் வாழ்க்கையில் நன்மணம் இல்லை. வளமும் இல்லை. இப்பகுதியினரில் பலர்தான் பிற மதம் புகுந்தவர்கள். இன்னும் ஒரு சிலரே எஞ்சியிருக்கின்றனர். அவர்களையும்கூடப் புத்தர்களாக ஆக்கப் பாடு படுகின்றார் ஒருவர். அதே காலத்தில் இந்தியப் பேரரசு அவர்களுக்கு எல்லா வகுப்பினரோடும் உடனிருந்து வாழ்வதற்குரிய உரிமையைச் சட்ட ரீதியாக வழங்கி யுள்ளது. அவர்கள் அடியெடுத்து வைக்கக் கூடாதென்றிருந்த ஆலயங்களில் அச்சமின்றி நுழைய உரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவே நாம் நமது பழக்கத்தை மாற்றிக்கொண்டு சேரிகள்தோறும் நுழைந்து பரிவோடு அவர்களை அணுகி அவர்களது துன்பம் துடைத்து அவர்களது உணர்ச்சியிலும் வாழ்விலும் சமயத்தைக் கலக்க வேண்டும். இந்தப் பணியால் இரண்டு நன்மை விளைகிறது. ஒன்று

சமயத் தொண்டு. மற்றென்று சமூகத் தொண்டு. இத்தகு பணியால் தமிழினமே உயர வழியுண்டு. ஒவ்வொரு சேரியிலும் என்று பிரார்த்தனை ஒலி எழுகிறதோ அன்றே சமயத்தின் நன்னாள்.

இந்த நூற்றாண்டை மேடை நூற்றாண்டென்று சொல்லி விடலாம். எதற்கெடுத்தாலும் மேடைச் சொற்பொழிவு. அலங்காரமான நடையில் ஒரு சில மணி நேரங்கள் பேசினால் மக்களை ஈர்த்துக் கவர்ந்துவிடலாம் என்ற நம்பிக்கை வளர்ந்துள்ள காலம் இது. அப்படியே நடந்துவருவதையும் நாம் அறிவோம். எனவே நாமும் சிறந்த சமயச் சொற்பொழிவாளர்களைத் தயாராக்கவேண்டும். அவர்களின் சொல்லாற்றலைப் பெருக்கவேண்டும். மூலை முடுக்குகளிளெல்லாம் நின்று சமய வாழ்வின் நல்லியல்புகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். மாறுபட்டவர்களின் மாறான பேச்சுக்களை உண்மையை எடுத்துக்காட்டுவதின் மூலம் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். சமயத் தொண்டர்கள் மேடையோடன்றி வாழ்க்கையிலும் பண்பட்டவராயிருத்தல் வேண்டும். இத்தகு தொண்டர்கள் ஒரு சிலரை நாட்டிலே உலவவிடுவோமானால் பெரிதும் நன்மை உண்டு.

சமயத் தத்துவங்களை விளக்குகின்ற முறையில் இனிய எளிய தமிழில் அடிக்கடி சிறு நூல்கள் வெளியிடவேண்டும். அவைகள் மிகவும் குறைந்த விலைக்கு வழங்கப்பட வேண்டும். நூல்கள் விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளினின்றும் எழுதல் கூடாது. குறிப்பாக உருவ வழிபாட்டு முறைகள், தத்துவங்கள், சமயச் சார்பில் உள்ள புறச் சாதனங்கள், சமய நூல்கள், புராணங்கள் முதலியவற்றைப் பற்றிய உண்மைக் கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டவேண்டிய கடமை நமக்குண்டு. இக் கடமையினின்றும் தவறிவிடுவோமானால் ஒன்றை மற்றொன்றாகப் பேசுகின்ற கூட்டம் பெருகி உண்மை அருகிவிடலாம். சமய அறிஞர்கள், சமயப்பற்றுள்ள படித்த இளைஞர்கள் இம் முயற்சியில் ஈடுபடவேண்டும். இந்தத் திருத்தொண்டினால் இன்று மக்களிடையே பரவியுள்ள மாறுபட்ட கருத்துக்களை மாற்றிவிடலாமென்று நம்புகின்றோம்.

அன்புடைப் பெருமக்களே! பணிகள் பலவற்றைப் பாங்குறத் தீட்டிக் காட்டலாம். எனினும் அனைத்தும் செயல் முறைக்கு வரவேண்டுமே. எனவே விரிவஞ்சி விடுக்க ஆசைப்படுகின்றோம். சமயத் தலைவர்கள் அனைவரும் இந்த இறுதியான கட்டத்தில் ஒன்றுபடவேண்டும். ஒவ்வொரு வர் தனிவாழ்விலும் சமயத்தொண்டு நல்ல இடம்பெற வேண்டும். இங்ஙனம் ஒன்றுபட்டு நல்ல ஈடுபாட்டுணர்ச்சி யோடு பணி செய்வோமானால் எண்ணிய பயனைப் பெறுவ தற்கு யாதும் ஐயமில்லை. ஒன்றுபடவும், தொண்டுகளில் ஈடுபடவும் ஆண்டவன் திருவருள் துணை செய்யுமென்று நம்புகின்றோம்.

இந்த முயற்சியின் சின்னம் தான் தமிழ்நாடு அருள் நெறித் திருக்கூட்டம். திருக்கூட்டத்தின் அருள் முழக்கம் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் கேட்கப்பெறுகிறது. நூற்றுக்கணக்கான அன்பர்கள் தம்மையும், தம் வாழ்வை யும் மறந்து இத் திருத்தொண்டில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களுக்கு நமது இதயம்கலந்த வாழ்த்து. கடந்த மூன் ருண்டுகளாகச் சைவசித்தாந்த சமாஜத்தினரோடு கலந்து உறவாடுகின்ற இன்பப்பேறு தொடர்ந்து கிடைத்துவரு கிறது. இந்த உறவு முறை இடையீடுபடாது வளரும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. இன்றைய சூழ்நிலையில் தமிழ்நாடு அருள்நெறித் திருக்கூட்டத்தினர் மேற்கொண்டுள்ள பெரும் பணிகளுக்கு சமாஜத்தினர் பக்கபலமாக இருந்து வருகின்றனர். தொண்டர் குலம் அனைத்தும் ஒன்று என்ற உண்மையை அருள்நெறித் திருக்கூட்டத்தினரும், சமாஜத் தினரும் மெய்ப்பித்து வருகின்றனர். இத்தகு பேரன்பு படைத்த சமாஜத்தினர்க்கு நமது உளம் கலந்த வாழ்த்து. மீண்டும் ஒருமுறை சமயவாழ்வுடையார் அனைவரும் ஒன்று பட அருள்பாலித்துத் திருத்தொண்டின் நெறிபேணி வளர்க்கத் துணைசெய்யும் வண்ணம் ஈரோடையப்பரின் இணையடிகளைச் சிந்திக்கின்றோம்! அன்பர்களது அன்பு பொருந்திய, ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம்!

வாழ்க தமிழ்! வளர்க அருள்நெறி!

ஒரு சிறந்த அறிஞர் மறைவு

நமது சைவ சித்தாந்த மகா சமாஜ உறுப்பினர் நாகர்கோவில் அட்வுகேற்று தலைக்குளம் பி. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் பி.எ.,பி.எல். தமது 55-வது வயதில் 23-4-1953ல் இறைவன் திருவடி அடைந்தார்கள். பிள்ளை அவர்கள் தென்திருவிதாங்கூரில் ஒரு பிரபல செல்வந்தராவர். பல ஆண்டுகள் ஒரு சீரிய வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார்கள்.

" தமிழன் " என்ற வாரப் பத்திரிகையின் பத்திராசிரியராகவும், திருவிதாங்கூர் தேவஸ்தானம் போர்டு நூற்பதிப்பு உபதேசக் கழகத்தின் உறுப்பினராகவும், கேரளா ஹிந்து மிஷன் நிர்வாகக் குழுவின் அங்கத்தினராகவும் அவர்கள் இந்நாட்டுக்கு அரிய சேவை செய்துள்ளார்கள். கல்வித்துறையில் சிறந்த ஆராய்ச்சியாளர். சங்க இலக்கியம், திருக்குறள், கம்பராமாயணம் முதலிய பெரும் நூற்களைக் கற்றுத்தேர்ந்து தமிழ்க்கலை மாநாடுகளில் சொற்பொழி வாற்றியும் தலைமை தாங்கியும் தொண்டு செய்தவர்.

சமயத்துறையில் புகழ்பெற்ற பேரறிஞர். பழனி காசிவிசி சிவ—ஸ்ரீ ஈசான சிவாசாரியார் சுவாமி அவர்களிடம் சிவதீக்கை பெற்றவர்கள். பன்னிரு திருமுறைகளில் மனம் பதித்தவர். சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய மெய்கண்ட சாத்திரங்களையும் நுணுகிக் கற்றவர். தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களிலும் கந்தர் அனுபூதி, திருப்புகழ், பெரியபுராணம் முதலிய அனுபூதி நூற்களிலும் அழுந்திய உளம் படைத்தவர். பகவத்கீதை, உபநிடதங்கள் முதலிய சாத்திரங்களையும் ஸ்ரீ அரவிந்த அடிகளின் " Life devine " முதலிய பல்ஞான நூற்களையும் விளக்கமுறப் பயின்றவர்கள். இதுமட்டுமல்ல. இந்த ஞானக் கருவூலங்களை இம்மாவட்டப் பல அன்பர்களும் படித்துப் பயன்பெறப் பெருந்துணை செய்தவர்கள். ஞான பூசையே தம்வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அதில் மிக்க ஆர்வமுற்று நின்றவர்கள்.

தம் வாழ்நாளின் பெரும் பாகத்தில் சமயப் பிரசாரத்துக்காக அரிய இனிய சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியும் சமய மாநாடுகளில் தலைமை உரைகள் நிகழ்த்தியும் மெய்யன்பர்களைப் பன்முறை இன்புறச் செய்தவர். அவர்களது கருத்துமிக்க உரைகளெல்லாம் அறிவுக்குத் தனிவிருந்து என்பதே கலைவல்லுநர்களின் முடிபு. மூர்த்திதலம் தீர்த்த யாத்திரையில் ஈடுபட்டுத் தென்னாட்டில் பாடல் பெற்ற பல திருத்தலங்களையும் தரிசித்தவர்கள். முருகன் அன்பையே அணிபாகக் கொண்டு வருடந்தோறும் பலமுறை திருச்சீரலைவாய்சென்று அப்பெம்மானை இடையறாது வழிபட்டு வந்தனர். புதுச்சேரி ஸ்ரீ அரவிந்த யோகிகளையும், திருவண்ணாமலை ஸ்ரீ ரமண முனிவரையும், காஞ்சங்கோடு சுவாமி ஸ்ரீ ராமதாஸ் அடிகளையும் பல ஆண்டுகளாகத் தரிசனம் செய்து உய்ந்தவர்கள்.

இலக்கியத் துறையிலும் சமயத் துறையிலுமுள்ள பல உள்நாட்டு வெளிநாட்டுப் பேரறிஞர்களோடு தொடர்பு பூண்டு அவர்களைத் தமது இல்லிலே வரவழைத்து அவர்களோடு அளவளாவித் தானும் மகிழ்ந்து பிறநண்பர்களையும் பலகாலம் மகிழ்விக்கச் செய்தவர். புலவர்களையும் அடியவர்களையும் ஆதரிக்கும் நல்மனம் படைத்தவர்கள். தமது கிராமமாகிய தலைக்குளம் பாடசாலை மாணவர்களுக்குத் தினந்தோறும் இலவசமாகப் பகல் உணவு அளித்துவருகிற இவர்களுடையவும் இவருடைய குடும்பத்தார்களுடையவும் தருமசிந்தனை யாவராலும் போற்றத் தக்கது. சமயக் கழகங்கள் நூல் நிலையங்கள், கலாசாலைகள், மருத்துவ சாலைகள் முதலியன நிறுவுவதற்கும், இலக்கியமா நாடுகள், சமய அவைகள் கூட்டுவதற்கும் அவர்கள் மனமுவந்து அளித்த பொருள் உதவியையும் ஊக்கத்தையும் யார்தான் மறக்கமுடியும்? பெருஞ் செல்வந்தரான அவர்களது வாழ்வு தூய எளிய வாழ்க்கையாலும் உயர்ந்த சீரிய சிந்தனைகளாலும் சாலப் பொலிந்து விளங்கியது. சுருங்கச் சொல்லின், அவர்கள் அறநெறியிலேயே வாழ்ந்த அண்ணல்.

ஆயினும் என்ன? அவர்களது அரிய உயிரை நோயெனும் பெயரால் கொடிய கூற்றுவன் கவர்ந்துவிட்டான். அவர்களது இருமனைவியர்களும் சிறுவர்களான ஓர் மைந்தனும் ஓர் மகளும் அவர்களைப் பிரிந்து நிற்கின்றனர். அவர்

களது மனைவி மக்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரித்தாகின்றன. இத்தகைய சிவ நெறிச் செல்வரின் மறைவு தென்னாட்டுக்குப் பொதுவாகவும் சமய உலகுக்குச் சிறப்பாகவும் ஈடிலா நட்டமாகும். இப்பெரு மகனாரது புனித ஆன்மா நித்திய சாந்தியை அடைந்து சிவ பரிபூரணம் எய்துமாறு எல்லாம் வல்ல எம்பெருமானை இறைஞ்சுகின்றோம்.

—சி. வள்ளிநாயகம், வழக்கறிஞர்.

மதிப்புரை

1. **பகவத்கீதை :—**(தமிழ்ச் செய்யுள்) ஆசிரியர் அ. ராமசாமி கவுண்டர், M. A., L.T., தலைமை ஆசிரியர், சேலம் கல்லூரி.

வடமொழியில் பாரதத்தில் பீஷ்மபருவத்தில் 18-ம்நாள் போரின் தொடக்கத்தில் போர்க்களத்தில் சஞ்சல முற்ற அருச்சுனனுக்குக் கண்ணபிரான் கூறிய உணர்ச்சி பொருந்திய 18 அத்தியாயங்கள் அடங்கிய பகவத்கீதை என்னும் நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. எளிதான தமிழ் நடையில் எவருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய சொற்களில் கண்ணிகளாலும் வெண்பாக்களாலும் இயற்றப்பட்டது. பொருள் எளிதில் புலப்படுவதற்காக வழக்கத்திலுள்ள வடமொழிச் சொற்களை உள்ளவாறே எடுத்து ஆண்டிருக்கும் முறையில் தமிழ் அறிந்த எவனும் இந்நூலில் கண்ட பொருள்களை அறிந்து கொள்ளக்கூடும். நூலின் விலை. அணு 8—தான். காலஞ்சென்ற ஆசிரியரின் நினைவார்த்தமாகவாவது தமிழ் மக்கள் எல்லாரும் இந்நூலை வாங்கிப் படிப்பார்களாக.

2. **சைவசித்தாந்த அறிவுக் கோள்கை :—**(Saiva Siddhantha Theory of Knowledge) ஆசிரியர் Dr. வி. பொன்னையா, அண்ணாமலைப்பல்கலைக் கழகம். விலை ரூ. 6.

இது ஒரு ஆங்கில நூல். சைவசித்தாந்தக் கொள்கைகளை ஆங்கிலருக்கு அறிவுறுத்தும் பொருட்டு எழுதப்பட்ட ஒரு அரிய நூல். மேல்நாட்டாருக்கு மட்டுமே யுன்றிக் கீழ்நாடுகளில் தமிழ் அறியாத மற்ற மக்களுக்கு இந்நூல் மிகுந்த பயனளிக்கும். தமிழ் மக்களுக்கும், எளிதில் அருமையான கொள்கைகள் அறிவதற்காகவும் பயன்படும். ஆசிரியர் தமிழோடு ஆங்கிலமும் வடமொழியும் ஒருங்கே கற்றவர். சைவசித்தாந்தத்தின் உண்மைகளை நன்கு அறிவதற்கு வடமொழிப் பயிற்சி இன்றியமையாததென்று ஆசிரியர் கூறுகின்றார். தெளிவாகத் தமிழ் மொழியில் சித்தாந்த நூல் ஒன்று வெளியிடப்படும் வரையில் அப்படிப்பட்ட கருத்து இருக்கவேண்டியதுதான். ஆசிரியர் இந்நூலில்தத்துவச்சொற்களை எடுத்துக் கூறுவதற்குப் பெரும்பான்மையாக வடமொழியையே எடுத்தாண்டிருக்கின்றார். ஆசிரியருடைய எண்ணப் போக்கில் பண்டைய உரையாசிரியர்களுக்குப் பின் சைவ சித்தாந்தத்தைப் பற்றிய விவரமான நூல் ஒன்றுகூட வெளிவரவில்லை யென்பதே. தமிழ் மொழியில் விரிவான நூல் ஒன்றும்கூட இல்லை என்பது ஒருவாறு இருக்க, ஆங்கிலத்திலாவது வேறு மொழிகளிலாவது சைவத்தில் நம்பிக்கை உள்ள அறிஞர்கள் ஒருவராவது விளக்கமான நூல் ஒன்றை நாளதுவரை எழுதவில்லை. இதுவரை வெளிவந்த நூல்கள் எல்லாம் கிறிஸ்தவர்களாலே வெளியிடப்பட்டுள்ளன. 1. வயலட் பரஞ்சோதியம்மை, 2. கோர்டான் மாத்யூஸ், 3. நவமணி டேவிட் நாடார், 4. ஜான் பியட் என்பவர்களே அப்படிப்பட்ட நூல்களை எழுதியிருக்கின்றார்கள். ஜெர்மனியில் டாக்டர் செமரஸ் என்பவர் எழுதியிருக்கின்றார். இந்தியர்களோ சின்னஞ்சிறு கட்டுரைகளைமட்டும் எழுதியிருக்கின்றார்கள். இக்குறைவினை நீக்குவதற்காக Dr. பொன்னையா அவர்கள் இந்த அரிய நூலை வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூல் இந்தியர்களுக்கும் மேல் நாட்டவர்களுக்கும் பயன் தரும் என்று கூறலாம்.

இந்நூலில் முதலில் சைவ சித்தாந்த அறிவின் வளர்ச்சியைக் குறித்துச் சுருக்கமாக வரலாற்றுப் பகுதியும், பிறகு சைவசித்தாந்தத்தைப் பற்றிய ஆதார நூல்களைக் குறிப்பிடுகையில் வடமொழி, தென்மொழி, இரண்டிலுள்ள நூல்

களின் விளக்கங்களும் சைவக்குரவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களின் வரலாறுகளும் கூறப்பட்டுள்ளன. அதன் பிறகு சைவசித்தாந்தத்தின்படி 'ஞானம்' என்பது என்ன, மற்ற சித்தாந்தங்களுக்கும் சைவத்திற்கும் உள்ள வேறு பாடுகள் என்ன என்று விளக்கப்பட்டுள்ளன. பின்னர் அனுபவம் முதலிய ஏழு அறிவுகள் எப்படிப்பட்டவை என்றும் பிரமாணங்கள் எவை என்றும் விளக்கமாகக் கூறப்பட்டன. அதோடு அத்வைதம் முதலிய மற்ற வாதி கள் எவ்வாறு மாறுபடுகின்றார்கள் என்பது கூறப்பட்டுள் ளது. இனி ஞானங்களின் பிரிவுகளாகிய பசு, பாச, பதி ஞானங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. காட்சி, கருதல், நூல் முதலிய பிரமாணங்கள் தர்க்கரீதியாக உதாரணங்களோடு விளக்கப் பட்டுள்ளன. முப்பொருள்களின் உண்மை, இலக்கணம் முதலியவற்றைக் கூறினபின் ஐயந்திரிபுகளின் பல்வேறு எடுத்துக்காட்டுகள் விளக்கப்பட்டிருக்கின்றன. இறுதியில் மேல்நாட்டுத் தத்துவக்கொள்கைகளைச் சைவசித் தாந்தத்தோடு ஒப்புவமைப்படுத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் ஆங்கிலத்தில் 336 பக்கங்களில் இவ்வா ராய்ச்சி நூல் எழுதப்பட்டுள்ளது. இதைப் போலவே ஏனையதமிழ்அறிஞர்களும் விளக்கமான நூல்களைத் தமிழி லும் ஆங்கிலத்திலும் எழுத முயற்சிப்பார்களாக.

செய்தித் திரட்டு

28, 29-3-53—பூவாளூர்ச் சைவசித்தாந்த சங்கம் 43-வது ஆண்டுவிழா—டி. எஸ். கந்தசாமி முதலியார் தலைமை—ஔவைதுரைசாமி பிள்ளை முதலியோர்கள் பேசினார்கள்.

* * *

13-4-53—தமிழ் ஆண்டுப்பிறப்பு - ஞானம்பிகை ஆலை யில் ஞான விநாயகர் கோவிலில் திரு. பாண்டியன் முதலி யோர்கள் 'யோகம்' என்னும் பொருள்பற்றித் திரு. V. C. சுப்பைய கவுண்டர் ஆதரவில் பேசினார்கள்.

* *

CONNEMARA PUBLIC LIBR